## பிரிவு – 3

## உள்ளாட்சி மன்ற நிதி – தற்போதைய நிலை

**5.3.1.** புள்ளி விவரப் பகுப்பாய்விலிருந்து அறியப்பட்டவாறான ஒவ்வொரு அடுக்கையும் (Tier) சேர்ந்த உள்ளாட்சி மன்றங்களின் தற்போதைய நிதி நிலை பற்றி கீழே விவாதிக்கப்படுகிறது.

### அ. மாநகராட்சிகள்

**5.3.2.** மாநகராட்சிகளின் மொத்த வருவாய் கணக்கிலான வரவு, செலவு, மிகை/ பற்றாக்குறை ஆகியவை இணைப்பு எண் 22–இல் கொடுக்கப்பட்டுள்ளன. 1993–94 ஆம் ஆண்டில் நிகர நிதி நிலையும், தீர்க்க வேண்டிய பொறுப்புகளும் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.2 31.3.94 ஆம் நாள் நிலவரப்படி மாநகராட்சிகளின் நிதி நிலையைக் காட்டும் விவர அறிக்கை (கடன் மற்றும் பொறுப்பு நிலவரம் உட்பட) (ரூபாய் இலட்சத்தில்)**

| | வருவாய் உபரி/ பற்றாக் குறை | மூலதன உபரி/ பற்றாக் குறை | நிகரம் | கடன் | வழிவகை முன்பணம் | ஓய்வூதியம் பொறுப்பு | வருங்கால வைப்புநிதி பொறுப்பு | மொத்தம் | நிகர நிலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கோம்புத்தூர் | 224.64 | 165.05 | 389.69 | – | – | – | – | – | +389.69 |
| சென்னை | 86.58 | –311.92 | –225.34 | 15305.38 | – | 4.93 | 382.90 | 15693.21 | –15918.55 |
| மதுரை | –46.32 | 41.18 | 5.14 | Nil | – | – | 447.00 | 447.00 | –441.86 |
| சேலம் | 40.74 | –15.85 | 24.89 | 49.51 | – | – | 81.36 | 130.87 | –105.98 |
| திருச்சிராப்பள்ளி | 35.78 | –12.83 | 22.95 | 145.08 | – | 1.59 | 94.81 | 241.48 | – 218.53 |
| திருநெல்வேலி | 113.57 | –6.17 | 107.40 | 688.15 | 75.11 | – | 60.75 | 824.01 | – 716.61 |

(–) தலைப்புகளில் குறியீடு இல்லை என்பதைக் காட்டுகிறது. தொகைகளில் (+) மிகை (–)பற்றாக்குறை

### நிதி ஆதாரங்கள் மற்றும் ஒதுக்கீடுகள் குறித்த ஆய்வு

**5.3.3.** திருநெல்வேலி தவிர ஏனைய அனைத்து மாநகராட்சிகளிலும் தனி நபர் வருமானம் ரூ.200–க்கு அதிகமாக இருந்தது. தனிநபர் செலவு, திருநெல்வேலி மாநகராட்சியில் ரூ.55 ஆகவும் சென்னை மாநகராட்சியில் ரூ.270 ஆகவும் இருந்தது. இது, மாநகராட்சிகளிடையே வரவு–செலவு அளவுகளில் பெருத்த வேறுபாடுகள் நிலவுவதைக் காட்டுகிறது. 1993–94 ஆம் ஆண்டில், மதுரை நீங்கலாக, ஏனைய அனைத்து மாநகராட்சிகளிலும் வருவாய் வரவு செலவுத் திட்டத்தில், உபரி நிலையே நிலவியது. இதுபோன்றே, முந்தைய ஆண்டுகளிலும் உபரி நிலையே நிலவியது.

**5.3.4.** தனி நபர் மூலதன வரவு, 1991–92 இலிருந்து 1993–94 வகையிலான மூன்றாண்டுகளில் ரூ.44 முதல் ரூ.46 வரை இருந்தது. மூலதன வரவும், செலவும் முக்கியமாக சிறப்புத் திட்டங்களையும் அரசிடமிருந்து கடன்கள்/சிறப்பு மானியங்கள் கிடைப்பதையும் பொறுத்தே அமைந்திருக்கின்றன. வருவாயினத்தில் கிடைத்த உபரி நிதி, மூலதன நிதியுதவிக்குப் போதுமானதான இல்லை. மாநகராட்சிகளின் ஒட்டு மொத்த வருவாயின வரவுகள், 1991–92இல் ரூ.193.99 கோடியாக இருந்து 1993–94இல் ரூ.243.85 கோடியாக அதிகரித்தன. இந்த உயர்வு 25.7 சதவீதம் ஆகும். தனிநபர் வாரியாக இது 1991–92 இல் ரூ.268.13 ஆக இருந்து 1993–94 இல் ரூ.337.03 ஆக உயர்ந்தது.

**சொந்த வருவாய்**

**5.3.5.** வருவாய்க் கணக்கிலான வரவுகளில், சொந்த வரி வருமானம் 1991–92இல் 37.6 சதவீதமாக இருந்து 1992–93இல் 28.12 சதவீதமாகக் குறைந்து, ஆனால் 1993–94 இல் 45.2 சதவீதமாக உயர்ந்துள்ளது. சொந்த வரியில் தனிநபர் வருமானத்தில் பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இது கோயம்புத்தூரில் ரூ.27.76 ஆகவும் திருநெல்வேலியில் 2.5 மடங்கு அதிகமாகவும் அதாவது ரூ.63.54 ஆகவும் இருந்தது.

**5.3.6.** சொந்த வரிகளில், சொத்து வரி, மிக அதிகமாக வருவாய் ஈட்டித் தருகிறது. அனைத்து மாநகராட்சிகளையும் ஒன்றாகச் சேர்ந்துப் பார்க்கும்போது இவ்வருவாய் 1991–92இல் 94 சதவீதமாகவும், 1992–93இல் 92.94 சதவீதமாகவும் 1993–94 இல் 85.13 சதவீதமாகவும் இருந்தது. வருவாய் வரியில் தனிநபர் வருமானத்தைப் பார்க்கும்போது, இவ்வருவாய் 16 சதவீதமாக உயர்ந்துள்ளது. தனிப்பட்ட மாநகராட்சிகளைப் பொறுத்தவரையில் மூன்றாண்டு சாராசரி வருமானத்தின் அடிப்படையில், இவ்வருவாய் 86 சதவீதம் முதல் 96 சதவீதம் வரை இருந்தது. உத்தேச வரிச் சீர்திருத்தங்களினால் வரும் ஆண்டுகளில் கணிசமான அளவுக்கு வருவாய் அதிகரிக்கக் கூடும்.

**5.3.7.** சொந்த வரிகளில், அடுத்தபடியாக அதிக வருவாய் ஈட்டித் தருவது தொழில் வரியாகும். சராசரியாக, 5.5 சதவீதம் வருவாய் ஈட்டித் தந்த இவ் வரி 1993–94 இல் 14.70 சதவீத வருவாய் ஈட்டியது. 1992 இல் புதிய சட்டத்தின் விதித்துறைகளைச் செயற்படுத்தியதே இந்த வருவாய் அதிகரிப்புக்குக் காரணமாகும். உரியவாறு வரி விதிப்பைச் செயல்படுத்தினால், இவ்வரியிலிருந்து இனிமேல் அதிக வருமானம் கிடைக்க வாய்ப்புண்டு.

**5.3.8.** வரி அல்லாத ஏனைய வருவாய் 1991–92 இல் ரூ.23.38 கோடியாக இருந்து 1993–94 இல் ரூ.41.33 கோடியாக அதிகரித்துள்ளது. இந்த உயர்வு, சுமார் 76.8 சதவீதம் ஆகும். இந்த வருவாய், 1991–92 இல் கிடைத்த மொத்த வருவாயில் 12 சதவீதம் ஆகும்; 1993–94 இல் 17 சதவீதம் ஆக உயர்ந்துள்ளது. தனி நபர் வருவாய், 1991–92இல் ரூ.32.31 ஆக இருந்து 1993–94 இல் ரூ.57.13 ஆக உயர்ந்தது. எனினும், 1993–94 இல் கோயம்புத்தூர் மற்றும் சென்னை மாநகராட்சிகள் நீங்கலாக, ஏனைய அனைத்து மாநகராட்சிகளிலும் சராசரி வருமானம் மாநில சராசரியைவிடக் குறைவாகவே இருந்தது. வரி அல்லாத ஏனைய வருவாயின் தனிநபர் வருமானம் சேலத்தில் ரூ.35 ஆகவும் கோயம்புத்தூரில் ரூ.67 ஆகவும் இருந்தது. இவ்வேறுபாடுகள், மாநகராட்சிகளிடையே வரி அல்லாத ஏனைய வருவாயை வசூலிப்பதிலுள்ள நிருவாகத் திறன் மற்றும் பயனீட்டாளர் கட்டணங்களிலுள்ள வேறுபாட்டையும் பிரதிபலிக்கின்றன.

**5.3.9.** வரி அல்லாத ஏனைய வருவாயில், சொத்துக்களிலிருந்து கிடைத்த வருவாய் அதிகமாக உள்ளது. அதாவது 1993–94–ல் இது 45 சதவீதமாக இருந்தது. இக்கால அளவில், பயனீட்டாளர் கட்டணங்கள் 20 சதவீதம் வருவாய் ஈட்டியுள்ளது. இதில், தண்ணீர் தீர்வை வாயிலாக

90 சதவீதம் கிடைத்தது. கட்டிட உரிமக் கட்டணங்கள் போன்று வரி அல்லாத ஏனைய வருவாய் மூலம் 1993–94 இல் கிடைத்த தொகை மிகச் சொற்பமாகும். அதாவது 8 சதவீதம் மட்டுமே ஆகும். சொந்த நிதி ஆதாரப் பற்றாக்குறை மொத்த ஒதுக்கீட்டில் 28 சதவீதம் ஆகும். சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய மாநகராட்சிகளில் வருவாய்ப் பற்றாக்குறை அதிகமாக இருந்தது. கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலியில் சொந்த நிதி ஆதாரம், மொத்த வருவாய் மற்றும் மூலதனச் செலவைவிட அதிகமாக இருந்தது. சொத்துக்களைக் குத்தகைக்கு விடுவதற்கான ஏல நடைமுறையிலும் பரிந்துரைக்கப்பட்ட கட்டணக் கணக்குப் பிரிவு மூலமாக பயனீட்டாளர் கட்டணங்களைக் கணக்கிடுவதிலும் தெரிவிக்கப்பட்டுள்ள சீர்திருத்தங்களின் மூலமும் கணிசமான அளவுக்குக் கூடுதல் வருவாயைத் திரட்ட இயலும்.

ஒப்படை செய்யப்பட்ட/பகிர்ந்தளிக்கப்பட்ட வரிகள்

5.3.10. அரசு ஒப்படை செய்த பகிர்ந்தளித்த வருவாய், 1991–92 இல் ரூ.87.37 கோடியாக இருந்து 1992–93 இல் ரூ.174.30 கோடியாக அதிகரித்தது. ஆனால், 1993–94 இல் இது ரூ.84.22 கோடியாகக் குறைந்தது. அந்தந்த ஆண்டுகளில் மாநகராட்சிகளுக்கு சரிக்கட்டப்பட்ட விற்பனை வரி மீதான மேல் வரிக்கேற்ப, உயர்வு/குறைவு அமைந்துள்ளது. தனி நபர் வாரியாகப் பார்க்கும்போது, ஒப்படை செய்யப்பட்ட வருவாய் 1991–92இல் 120.76 ஆக இருந்து 1992–93இல் ரூ.240.91 ஆக உயர்ந்து, பின்னர் 1993–94 இல் 116.70 ஆக குறைந்தது. இவ்வருவாயின் பங்கு சென்னையில் மிக அதிகமாக 40 சதவீதம் முதல் 69 சதவீதம் வரையும், சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளியில் 30 முதல் 45 சதவீதம் வரையும், ஏனைய மாநகராட்சிகளில் 20 முதல் 30 சதவீதம் ஆகவும் இருந்தது. இது, மாநகராட்சிகளிடையே ஒப்படை செய்யப்படும்/பகிர்ந்தளிக்கப்படும் முறையிலுள்ள ஏற்றத் தாழ்வைத் தெளிவாகக் காட்டுகிறது. அரசு தற்போதைய வரியைப் பகிர்ந்தளிக்கும் முறையைத் திருத்தியமைக்க வேண்டியது அவசியமாகிறது. முக்கிய வருவாய் ஆதாரமான விற்பனை வரி மீதான மேல்வரியும் அடுத்த இடம் வகிக்கிற முத்திரைத்தாள் தீர்வை மேல்வரியும் மூன்றாம் இடம் வகிக்கிற கேளிக்கை வரியும் இதில் அடங்கும். கடைசியாகக் குறிப்பிட்ட இரு வரிகளும் உள்ளூரில் விதிக்கப்படும் வரிகள் என்பதாலும் அவை உள்ளூர் வரி ஆதாரங்களை நம்பியுள்ளதாலும் வசூல் கணக்கீட்டின் அடிப்படையில் பங்கிடப்படுவதாலும் அவற்றில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படுவது இயல்பே. விற்பனை வரி, மோட்டார் வாகனங்கள் வரி போன்ற அரசு வரிகளைப் பங்கிடுவதற்கும், சமமாகப் பிரித்தளிப்பதற்கும் தற்போது தெரிவிக்கப்பட்டுள்ள திருத்த ஏற்பாடுகள் உள்ளாட்சி மன்றங்களிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உதவி மானியங்கள்

5.3.11. உதவி மானியங்கள், 1991–92இல் வருவாய்க் கணக்கிலான மொத்த வரவுகளில் 5 சதவீதம் என்ற அளவில் இருந்தது. 1993–94 இல் இது, 3.2 சதவீதமாகக் குறைந்துள்ளது. இம்மானியங்களில், குறிப்பிட்ட நோக்கத்திற்கான மானியங்கள் 90 சதவீதம் ஆகும். சென்னை மாநகராட்சி, 1991–92 இல் அதிகளவாக 64 சதவீதம் மானியம் பெற்றது. இம்மானியம், 1992–93, 1993–94 ஆண்டுகளில் 80 சதவீதத்தைத் தாண்டியது. மானியங்கள் வழங்கும் முறையில் பெரும் குறைபாடுகள் உள்ளன. இம்மானியங்கள் தற்காலிக முறை ஏற்பாடாகவே வழங்கப்படுகின்றன. இதனால், ஏற்றத்தாழ்வுகள் அதிகரிக்கத்தான் செய்யும். இந்த மானியம் வழங்கும் முறையினால், அதனை முன்கூட்டியே கணக்கிட முடியவில்லை என்று அறியப்படுகிறது. குறிப்பிட்ட நோக்கங்களுக்கான மானியங்கள் தவிர மற்றவைகளில் திட்டவட்டமான முறை ஏதும் பின்பற்றப்படவில்லை. மாநில அரசின் மானியப் பகிர்வுக் கொள்கையைத் திருத்தி அமைக்க வேண்டியது அவசியமாகிறது. இது தொடர்பாக மாநில நிதி ஆணையம் தெரிவித்துள்ள கருத்துக்கள் மிகவும் உதவியாக இருக்கும்.

பொதுக் கருத்துக்கள்

**5.3.12.** வருவாய்க் கணக்கில் செலவு, 1991–92 இல் ரூ.149.72 கோடியாக இருந்து 1993–94 இல் ரூ.187.66 கோடியாக அதிகரித்தது. இந்த உயர்வு, 25 சதவீதமாகும். தனிநபர் வாரியான செலவு, ரூ.206.93 இலிருந்து ரூ.259.22 ஆக உயர்ந்தது. கட்டாயமாகச் செய்ய வேண்டிய பணிகள் குறித்து அனைத்து ஆண்டுகளிலும் மிக அதிகமாக செலவு செய்யப்பட்டுள்ளது. இச்செலவு 48 சதவீதம் ஆகும். தனி நபர் செலவு 1991–92 இல் ரூ.96.31 ஆக இருந்து 1993–94 இல் ரூ.129.29 ஆக உயர்ந்தது. இவ்வுயர்வு 34 சதவீதம் ஆகும். குடிமைப் பணிகள் குறித்த பணியாளர்கள் உட்பட மொத்த பணியாளர்கள் குறித்த செலவு 1991–92 இல் ரூ.87.30 கோடியாக இருந்து, 1993–94 இல் ரூ.107.31 கோடியாக உயர்ந்தது. இருப்பினும், இச்செலவு குடிமைப்பணிகளில் போதுமான அளவில் செய்யப்பட்டுளளனவா என்பதைக் காட்டவில்லை. மாநில நிதி ஆணையம் குறிப்பிடும் குறைந்தளவு பணி அளவுகளும் அதற்குத் தேவைப்படும் செலவுத் தொகையும் அதற்கான கூடுதல் நிதிப் பகிர்வும் குடிமைப்பணிகளின் செலவின் அளவை அதிகரிக்கவும், அதிக செலவில் சிறந்த முறையில் பணிகளை ஆற்றவும் உதவும்.

**5.3.13.** 1993–94 இல், வருவாய்க் கணக்கு நிதி நிலைமை மதுரை மாநகராட்சி நீங்கலாக ஏனைய அனைத்து மாநகராட்சிகளிலும் உபரியாக இருந்ததையும், முலதனக் கணக்கு நிதி நிலைமை கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சிகள் நீங்கலாக ஏனைய அனைத்து மாநகராட்சிகளிலும் பற்றாக்குறை நிலவியதையும் காட்டுகிறது. இருப்பினும், இந்த வருவாய் / மூலதன உபரி அல்லது பற்றாக்குறையில் பகுதி 2 இல் கடன் பணிகள் குறித்த அத்தியாயத்தில் ஏற்கனவே விளக்கப்பட்டவாறு, அந்தந்த உள்ளாட்சி மன்றங்களில், கடன் ஆண்டுத் தவணைத் தொகை, ஒப்வூதியம், வருங்கால வைப்பு நிதிப் பங்குத்தொகை ஆகியவை அடங்கிய கடன் பணி குறித்த பொறுப்புகள் கணக்கில் கொள்ளப்படவில்லை. காலங்கடந்த இப்பொறுப்புகள் அனைத்தும் கணக்கில் கொள்ளப்பட்டால், (மாநில நிதி ஆணையத்திற்கு அளித்த தகவலில் கோயப்புத்தூர் மாநகராட்சி கடன் விவரங்கள் எதுவும் இல்லை என்று குறிப்பிட்டிருந்தது). கோயம்புத்தூர் மாநகராட்சி நீங்கலாக, ஏனைய அனைத்து மாநகராட்சிகளிலுமே கணக்குகளில் பற்றாக்குறை பெருமளவில் இருக்கும். இவற்றுள், சென்னை மாநகராட்சியில்தான் உயர்ந்தளவு அதாவது ரு.159.19 கோடி பற்றாக்குறை உள்ளது. ஏனெனில், 31.3.1994 ஆம் நாள் நிலவரப்படி கடன்கள் மீதான காலங்கடந்த பொறுப்புகள் மட்டுமே ரூ.153.05 கோடியாகும். இதற்கடுத்தபடியாக உயரளவு பற்றாக்குறை உள்ள மாநகராட்சி திருநெல்வேலியாகும். இங்கு, காலங்கடந்த கடன் பொறுப்பு ரூ.6.88 கோடியாகும். கோயம்புத்தூர் தவிர ஏனைய மாநகராட்சிகள் அனைத்தும் வருங்கால வைப்புநிதி சந்தா மூலம் வசூலித்த தொகைகளில் பெரும் தொகையைத் தம் சொந்தச் செலவுக்காகப் பயன்படுத்தி விட்டன. இ த்தொகையை இம்மாநகராட்சிகள் வட்டியுடன் சேர்த்து சந்தாதாரர்களுக்கு எவ்வாறு கொடுத்துத் தீர்க்கப் போகின்றன என்பது கவலை தரும் விஷயமாகும். இவ்வாறாக, அனைத்து மாநகராட்சிகளின் நிதி நிலைமைகளும் நலிவடைந்து உள்ளன என்பதையும், வருவாய்க்கணக்கு உபரி நிதி காட்டிய போதிலும் அவற்றின் பொறுப்புக்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால், பற்றாக்குறைதான் மிக அதிகமாக உள்ளது என்பதையும் காணலாம். எனினும், மாநகராட்சிகளில் அந்தந்த ஆண்டுகளில் நடப்புப் பொறுப்புக்களை மட்டும் தீர்ப்பதற்குள்ள வாய்ப்புள்ளது.

ஆ. நகராட்சிகள்

ஒட்டு மொத்த நிதி நிலைமை

**5.3.14.** 1991–92 முதல் 1993–94 வரையிலான மூன்றாண்டுகளில், மொத்த வருவாய்/ மூலதனக் கணக்கில் வரவுகள் / செலவுகள் ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை வருமாறு:–

**அட்டவணை 5.3 நகராட்சிகளின் ஒரு மொத்தத வரவு – செலவுத் திட்டங்கள்**

| விவரங்கள் | (தொகை ரூ. இலட்சத்தில்) 1991–92 | | (தனிநபர் வாரியாக வரவு, செலவு ரூபாயில்) 1992–93 | | 1993–94 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை | தனி நபர் | தொகை | தனி நபர் | தொகை | தனி நபர் |
| வருவாய்க் கணக்கில் வரவுகள் | 12432.87 | 173.64 | 13548.77 | 189.23 | 15727.50 | 219.66 |
| வருவாய்க் கணக்கில் செலவுகள் | 11405.98 | 159.30 | 13047.77 | 182.23 | 14245.76 | 198.96 |
| வருவாய்க் கணக்கில் உபரி | 1026.89 | 14.34 | 501.00 | 7.00 | 1481.73 | 20.69 |
| மூலதனக் கணக்கில் வரவுகள் | 5178.98 | 72.33 | 5948.93 | 83.09 | 5923.73 | 82.73 |
| மூலதனக் கணக்கில் செலவுகள் | 5300.33 | 74.03 | 6072.27 | 84.81 | 6099.61 | 85.19 |
| மூலதனக் கணக்கில் பற்றாக்குறை | – 121.34 | – 1.69 | –123.34 | –1.72 | –175.88 | –2.46 |
| மொத்த வரவுகள் | 17611.85 | 245.976 | 19497.69 | 272.315 | 21651.23 | 302.393 |
| மொத்த செலவு | 16706.30 | 233.329 | 19120.03 | 267.040 | 20345.37 | 284.154 |
| உபரி | 905.5470 | 12.647 | 377.6677 | 5.27471 | 1305.85 | 18.238 |

**5.3.15.** ஒட்டு மொத்த வருவாய்க்கணக்கிலான வரவு 1991–92 இல், ரு.124.33 கோடியாக இருந்து 1993–94 இல் ரூ.157.28 கோடியாக அதிகரித்துள்ளது. வருவாய்க் கணக்கிலான செலவுகளும் அதற்கு நிகராக, ரூ.114.06 கோடியிலிருந்து 1993–94 இல் ரூ.142.46 கோடியாக உயர்ந்துள்ளது. தனிநபர் வாரியாகப் பார்த்தால், வருவாய்க் கணக்கிலான வரவு ரூ.173.64 இலிருந்து ரூ.219.66 ஆக அதிகரித்துள்ளது. வருவாய்க் கணக்கிலான செலவும் ரூ.159.30 இலிருந்து ரூ.198.96 ஆக அதிகரித்துள்ளது. வருவாய்க் கணக்கில் உபரி நிதி சொற்ப அளவில் ரூ.10 கோடியிலிருந்து ரூ.15 கோடியாக உயர்ந்துள்ளது. தனி நபர் வாரியாக இது 1993–94 இல் ரூ.20.69 ஆகும். மூலதனக் கணக்கிலான வரவும் மூலதனக் கணக்கிலான செலவும் கூட 1991–92 இலிருந்ததைவிட 1993–94 இல் அதிகரித்துள்ளது. ஆனால், இறுதியில் 1991–92 இல் ரூ.1.2 கோடியும் 1993–94 இல் ரூ.1.76 கோடியும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. நிகர உபரி நிதி 1991–92 இல் ரூ.9.0 கோடியாக இருந்து 1993–94 இல் ரூ.13.06 கோடியாக அதிகரித்துள்ளது. ஆனால், நிகர உபரியில், பின்வரும் பொறுப்புகள் கணக்கில் கொள்ளப்படவில்லை:–

| | | | |
|---|---|---|---|
| (1) | கடன்களும் வழிவகை முன்பணங்களும் | – | ரூ.137.80 கோடி |
| (2) | ஓய்வூதியப் பொறுப்பு | – | ரூ.1.66 கோடி |
| (3) | வருங்கால வைப்பு நிதிப் பொறுப்பு | – | ரூ.11.54 கோடி |

இந்தப் பொறுப்புகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டால், 1993–94 ஆம் ஆண்டில் நகராட்சி நிதி, ரு.137.94 கோடி நிகரப் பற்றாக்குறையே காட்டும். வருவாய்க் கணக்கில் வரவுகள், செலவுகள் வருவாய்க் கணக்கில் உபரி / பற்றாக்குறை ஆகிய விவரங்கள், நகராட்சிகளின் நிலைகள், மற்றும் மக்கள் தொகைகளின் அடிப்படையில் தகவலுக்காகக் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. மொத்தத்தில், சொற்ப அளவில் உபரி நிதி காணப்பட்டபோதிலும், 28 நகராட்சிகளில், வருவாய்க்கணக்கில் பற்றாக்குறையும் (27 சதவீதம்), 28 நகராட்சிகளில் சொற்ப உபரியும் 47 நகராட்சிகளில் கணிசமான உபரியும் காணப்படுவதை இவ்விவரங்களிலிருந்து அறிய வரலாம். ஒரு நகராட்சியின் நிதி ஆதாரத்தை / பற்றாக்குறையை மற்றொரு நகராட்சிக்கு மாற்ற முடியாது என்பதால், ஒட்டு மொத்த உபரி/பற்றாக்குறையை மாநில அளவில் துண்டு விழும் இடைவெளியை நிரப்புவதற்குரிய ஒரு அளவுகோலாகப் பயன்படுத்த முடியாது என்பதை இது மேலும் உறுதி செய்கிறது.

தவிரவும், உபரி நிலையில் உள்ள நகராட்சிகூட அதன் பொறுப்புகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் பற்றாக்குறை நிலைக்கு இறங்கும்.

**அட்டவணை 5.4 வருவாய்க் கணக்கிலான வரவுகள், வருவாய்க் கணக்கிலான செலவுகளுக்கு ஏற்ப நகராட்சிகளைப் பிரித்தல்**

| | வருவாய் வரவுகள் | | | வருவாய் செலவுகள் | | |
|---|---|---|---|---|---|---|
| தொகை (ரூபாயில்) | 1991–92 | 1992–93 | 1993–94 | 1991–92 | 1992–93 | 1993–94 |
| 25 இலட்சம் வரை | 8 | 4 | 3 | 7 | 5 | 5 |
| 25 – 50 இலட்சம் | 5 | 15 | 13 | 19 | 16 | 13 |
| 50 – 100 இலட்சம் | 32 | 33 | 28 | 35 | 32 | 28 |
| 1 – 1.5 கோடி | 22 | 20 | 23 | 23 | 24 | 27 |
| 1.5– 2கோடி | 10 | 12 | 13 | 6 | 10 | 11 |
| 2 கோடிக்கு மேல் | 16 | 19 | 23 | 13 | 16 | 19 |
| மொத்தம் | 103 | 103 | 103 | 103 | 103 | 103 |

**அட்டவணை 5.5 வருவாய்க்கணக்கிலுள்ள உபரி மற்றும் பற்றாக்குறைக்கு ஏற்ப நகராட்சிகளைப் பிரித்தல்**

| | 1991–92 | | 1992–93 | | 1993–94 | |
|---|---|---|---|---|---|---|
| தொகை (ரூபாயில்) | உபரி | பற்றாக்குறை | உபரி | பற்றாக்குறை | உபரி | பற்றாக்குறை |
| 5 இலட்சம் வரை | 15 | 20 | 12 | 12 | 14 | 10 |
| 5 – 10 இலட்சம் | 11 | 9 | 17 | 11 | 14 | 7 |
| 10 – 15 இலட்சம் | 6 | 2 | 3 | 6 | 8 | 6 |
| 15 – 20 இலட்சம் | 8 | 4 | 7 | 6 | 8 | 1 |
| 20 இலட்சத்திற்கு மேல் | 22 | 6 | 19 | 10 | 31 | 4 |
| மொத்தம் | 62 | 41 | 58 | 45 | 75 | 28 |

**சொந்த வருவாய்கள்**

**5.3.16.** சொந்த வருவாய் என்பதில், சொந்த வரிகள், வரியல்லாத ஏனைய வருவாய்கள் ஆகியவை அடங்கும். 1991–92 ஆம் ஆண்டில், மொத்த வருவாயில் சொந்த வருவாய் 63.5 சதவீதமாக இருந்தது. 1993–94–ல் இது 71 சதவீதமாக உயர்ந்துள்ளது. சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் தனி நபர் வருவாய், 1991–92–ல் ரூ.110.12 ஆக இருந்து 1993–94–ல் ரூ.156.67 ஆக உயர்ந்தது. சொந்த நிதி ஆதாரங்களில், சொந்த வரியே முக்கிய ஆதாரமாக விளங்குகிறது. 1993–94 ல் இது மொத்த வருவாயில் 41 சதவீதமாகும். 1991–92ல் இது 36 சதவீதமாக இருந்தது. சொந்த வரிகளில், சொத்து வரி மட்டும், 1991–92ல் மொத்த வரி வருவாயில் 90 சதவீதமாக இருந்து 1992–93ல் 93.5 சதவீதமாக உயர்ந்து மீண்டும் 1993–94ல் 84 சதவீதமாகக் குறைந்தது, 1993–94ல் தொழில் வரி மூலம் வருமான பெருமளவு மொத்த வரவில் சேர்ந்ததால் சொத்து வரி மூலம் உள்ள சதவீதம் குறைந்து

காணப்படுகிறது. தொழில் வரி 1991–92 ஆம் ஆண்டை விட 1993–94ல் 35 சதவீதம் அதிகரித்துள்ளது. 1991–92ல் ரூ.55.68 ஆக இருந்த தனி நபர் சொத்து வரி, 1993–94ல் ரூ.75.28 ஆக உயர்ந்துள்ளது. மொத்த தனி நபர் வருமானம் 1991–92ல் ரூ.173.66 ஆக இருந்து 1993–94ல் ரூ.219.66 ஆக உயர்ந்துள்ளது. மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்துள்ள கட்டிடப் பரப்பு அடிப்படையிலான வாடகை மதிப்பின் அடிப்படையில் வரி வீதங்களைச் சீரமைத்தல், குறைந்தளவு மற்றும் உயரளவு வரி வீதங்களை நிர்ணயித்தல், ஒரே சீரான வரி விதிப்பு முறையைப் பின்பற்றுவது ஆகிய நடவடிக்கைகளால் வரிகளிலிருந்து நல்ல கணிசமான அளவு கூடுதல் வருவாய் கிடைக்கக்கூடும்.

5.3.17. மொத்த வருவாய்க் கணக்கிலான வரவில், வரியல்லாத ஏனைய வருவாய்களில் தனி நபர் வருமானம் இரண்டாவது முக்கிய இடம்பெற்றது. 1991–92ல் ரூ.47.90 ஆக இருந்து 1993–94ல் ரூ.66.31 ஆக உயர்ந்தது. இந்த நிதி ஆதாரத்தில் பெரும் பகுதி, சொத்திலிருந்து கிடைத்த வருமானமாகும். இதற்கு அடுத்தபடியாக, குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழ் வசூலிக்கப்படும் பயனீட்டாளர் கட்டணத்திலிருந்து அதிக வருமானம் கிடைக்கிறது. ஆனால், சொத்துகளிலிருந்து கிடைக்கும் வருமானம் ஒரே சீராக இல்லை. எனினும் வரியல்லாத ஏனைய வருவாயில், பயனீட்டாளர் கட்டணம் 1991–92 ல் 26.5 சதவீதமாக இருந்து , 1993–94 ல் 33 சதவீதமாக உயர்ந்தது. பயனீட்டாளர் கட்டணத்தில், தண்ணீர் வரி 90 சதவீதமாகும். உரிமக் கட்டணம் முதலானவற்றிலிருந்து கிடைத்த வருமானம் மொத்தத்தில் 4 சதவீதம் மட்டுமே. சொத்துக்களைக் குத்தகைக்கு விடுவது, பயனீட்டாளர் கட்டணத்தை மாற்றி அமைத்தல் குறித்த பரிந்துரைகள் செயல்படுத்தப்படுமேயானால், இந்த நிதி ஆதாரங்களிலிருந்து வருவாய் பெருக வாய்ப்பு இருக்கிறது.

5.3.18. ஒப்படை செய்யப்படும் / பங்கீடு செய்யப்படும் வருவாய், தொகை அளவில் 1991–92 இல் ரூ.34.57 கோடியாக இருந்து 1993–94 இல் ரூ.39.21 கோடியாக அதிகரித்துள்ள போதிலும், இதன் சதவீதம் 1992–93 இல் 30 ஆக இருந்து 1993–94 இல் 25 சதவீதமாக குறைந்துவிட்டது. ஒப்படை செய்யப்பட்ட வருவாய் குறித்த தனி நபர் வாரி வருமானம் 1991–92 ல் ரூ.48.29 ஆக இருந்து 1993–94 இல் சுமார் ரூ.54.76 ஆக அதிகரித்திருக்கிறது. வெவ்வேறு நிலைகளைச் சேர்ந்த உள்ளாட்சி மன்றங்களிடையே இந்த நிதி ஆதாரத்தில் பெருமளவு பேறுபாடு காணப்பட்டது. அதாவது, முன்றாவது நிலை நகராட்சிகளில் தனி நபர் வருவாய் ரூ.33.09 ஆகவும், சிறப்பு நிலை நகராட்சிகளில் தனி நபர் வருவாய் ரூ.77.89 ஆகவும் இருந்தது.

5.3.19. நகராட்சிகளைப் பொறுத்தவரையில் ஒப்படை செய்யப்பட்ட வருவாயிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் பெரும் பகுதி கேளிக்கை வரியிலிருந்து கிடைக்கிறது. அதற்கு அடுத்தபடியாக, முத்திரைத்தாள் தீர்வை மீதான மேல்வரியிலிருந்து கிடைக்கிறது. இவ்வரியிலிருந்து கிடைத்த வருமானம், 1991–92 இல் 43 சதவீதமாகவும் 1993–94 இல் 46 சதவீதமாகவும் இருந்தது. விற்பனை வரி மீதான மேல் வரி, 1991–92 இல் 9.2 சதவீதமாக இருந்தது. 1993–94 இல் 2 சதவீதமாகக் குறைந்து விட்டது, ஒப்படை செய்யப்படும் வருவாயை உயரளவு பங்குகளுடன் சீரமைப்பது, உள்ளூர் வரிகள் அல்லாத ஏனைய மாநில அரசு வரிகளிலிருந்து கிடைக்கும் ஒப்படைகளுக்கு பொதுப் பங்கீட்டுத் தொகுப்பு நிதி ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துக்கள், சிறந்த நேர்மையான முறை ஒன்றை உருவாக்க உதவும் என்பதோடு கணிசமான அளவுக்குக் கூடுதல் வருவாயும் கிடைக்கச் செய்யும்.

**உதவி மானியங்கள்**

5.3.20. நகராட்சிகளுக்குக் கிடைக்கும் மொத்த வருவாயில் மானியங்கள் வாயிலாகக் கிடைக்கும் வருவாய் சராசரியாக 5.7 சதவீதம் ஆகும். இவற்றுள், குறிப்பிட்ட நோக்கங்களுக்கான மானியங்கள் 1991–92 இல் 82 சதவீதமாக இருந்து 1992–93 இல் 69 சதவீதமாகக் குறைந்து,

1993–94இல் மீண்டும் 85 சதவீதமாக அதிகரித்தது. இந்தக் குறிப்பிட்ட நோக்கத்திற்கான மானியங்களிலேயே அதிக வருமானம் கல்வி மானியம் வாயிலாகத்தான். இது 1991–92 இல் 67 சதவீதமாக இருந்து 1993–94 இல் 31 சதவீதமாக குறைந்தது. கல்வியை அரசு தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டது ஒருவேளை இதற்குக் காரணமாக இருக்கலாம். சாலை மானியங்கள் 4.5 சதவீதத்திலிருந்து 29 சதவீதமாக கணிசமான அளவு உயர்ந்தது. தனி நபர் வாரி மானிய வருவாய் நிலைக்கு நிலை வேறுபட்டது. மூன்றாவது நிலை நகராட்சிகளில் ரூ.6.44 ஆகவும் சிறப்பு நிலை நகராட்சிகளில் ரூ.12.21 ஆகவும் இருந்தது. கீழ்நிலையிலுள்ள நகராட்சிகளுக்கு உதவி அளிக்க வேண்டுமென்ற பொதுவான கோட்பாட்டை மீறி, உயர் நிலை நகராட்சிகளுக்கு உயரளவு மானியங்கள் அளிக்கப்பட்டுள்ளதையே இது உணர்த்துகிறது.

பொதுவான கருத்துக்கள்

**5.3.21.** மொத்த வருவாய்க் கணக்கிலான செலவு 1991–92 இல் ரூ.114 கோடியாக இருந்து, 1993–94 இல் ரூ.142.6 கோடியாக அதிகரித்து 25 சதவீதமாக உயர்வை காட்டியது. தனி நபர் வருவாய்– கணக்கிலான செலவு 1991–92 இல் ரூ.159.30 ஆக இருந்து 1993–94 இல் ரூ.198.96 ஆக உயர்ந்தது. இந்த இனத்தின் கீழ் மிக உயரளவுச் செலவு முன்பு சுட்டிக்காட்டப்பட்டவாறு, கட்டாயப் பணிகள் வகையில் ஏற்பட்டுள்ளது. இந்த உயர்வு சுமார் 46 சதவீதம் ஆகும். தனி நபர் வாரியாகக் கணக்கிட்டால், 1993–94 ஆம் ஆண்டில் ரூ.91.81 என்ற அளவில் இருந்தது. மூலதனக் கணக்கிலான வரவுகளும் கூட ரூ.51.79 கோடியிலிருந்து ரூ.59.24 கோடியாக உயர்ந்து அதற்கு நிகராகச் செலவும் ரூ.53 கோடியிலிருந்து ரூ.61 கோடியாக உயர்ந்தது. மொத்த வரவுகள் தனி நபர் வாரியான வருமானம் ரூ.72.33 முதல் ரூ.82.73 ஆக இருப்பதையும் செலவுகள் ரூ.73.33 முதல் ரூ.85.19 ஆகவும் கணக்கிடப்பட்டுள்ளது. தனி நபர் வாரியான செலவை நிலை வாரியாகப் பிரித்துப் பார்த்தால், பல்வேறு நிலை உள்ளாட்சிகளுக்கிடையேயும் ஒரே வகை உள்ளாட்சிக்குள்ளும் வேறுபாடுகள் காணப்பட்டன. மூன்றாம் நிலை நகராட்சிகளின் செலவு ரூ.128.36 ஆக இருந்தது. சிறப்பு நிலை நகராட்சிகளின் செலவு, ஏறத்தாழ இரட்டிப்பாக அதாவது ரூ.246.16 ஆக இருந்தது. இரண்டாம், முன்றாம் நிலை நகராட்சிகளில் தனி நபர் வாரி செலவு, மாநில சராசரிக்கும் குறைவாக ரூ.180.17 ஆக இருந்தது.

**5.3.22.** இது பல்வேறு நிலைகளைச் சேர்ந்த நகராட்சிகளிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளையே காட்டுகிறது. இதற்கு முக்கிய காரணம், வருவாய் ஈட்டும் திறன் மற்றும் அமுல்படுத்துவதில் ஏற்படும் இடர்பாடுகள் ஆகும். முக்கியப் பணிகள் கீழ் கணக்கில் காட்டப்பட்டுள்ள பணியாளர்கள் உட்பட பணியாளர் குறித்த மொத்தச் செலவு 1991–92 இல் ரூ.68.55 கோடியாக இருந்தது. இது 1993–94 இல் ரூ.85.14 கோடியாக உயர்ந்தது. மூலதனக் கணக்கிலான வரவுகளும் செலவுகளும் பெரும்பாலும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களிலிருந்து கிடைக்கப்பெறும் நிதியுதவியைப் பொறுத்து அமைந்தன.

**5.3.23.** வருவாயைப் பொறுத்து நகராட்சிகளின் நிலைகளின் தற்போதைய வகைப்பாடு, சரியாக இல்லை. பணத்தின் அடிப்படையில் பணிகளின் அளவைக் கணக்கிட்டால், நகராட்சிக்கு நகராட்சி அது வேறுபடுகிறது என்பதை புள்ளி விவரங்கள் உணர்த்துகின்றன. மூன்றாண்டுகளில், வருவாய்ப் பற்றாக்குறைகள் காணப்படுகின்ற நகராட்சிகளின் எண்ணிக்கை மாறிக் கொண்டே இருப்பது, மாநில அரசு நகராட்சிகளுக்கு நிதி பகிர்ந்தளிப்பதிலுள்ள ஏற்றத்தாழ்வையும், (நகராட்சிகளிடம்) மேலும் மேலும் அதிக எண்ணிக்கையில் ஒப்படைக்கப்படுகின்ற பணிகளுக்கும் அவற்றிற்கான நிதி ஆதாரங்களுக்கிமிடையே சமநிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதையும் உணர்த்துகிறது. நகராட்சிகளுக்குள்ளும், ஒரே மாதிரியான நிலைகளைச் சேர்ந்த நகராட்சிகளிடையேயும் வருவாய்களையும், செலவுகளையும் பகிர்ந்தளிப்பதில் காணப்படும் வேறுபாடுகளை ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகும். நகராட்சிகளின் நிலை வாரியாக தனி நபர்

மொத்த வருவாயை பகிர்ந்தளிப்பதில், பலவகை நிலை நகராட்சிகளுக்கிடையேயும் ஒரே நிலையைச் சேர்ந்த நகராட்சிகளுக்கிடையேயும் காணப்படும் வேறுபாடுகளை இணைப்பு எண் 113 இல் உள்ள விவர அறிக்கையில் காணலாம். சிறப்பு நிலை நகராட்சிகளில் தனி நபர் வருமானம் ரூ.271.65 என்றிருக்கையில், மூன்றாம் நிலை நகராட்சியில் இவ்வருமானம் ரூ.134.20 ஆக இருந்தது. பல்வேறு அளவுகளில் மக்கள் தொகை கொண்ட நகராட்சிகளிடையேயும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. 25,000 க்குக் குறைவாகவும் 75,000 க்கும் ஒரு இலட்சத்திற்கும் இடைப்பட்ட அளவிலும் மக்கள் தொகையைக் கொண்டுள்ள சிறப்பு நிலை மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் இதே வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவ்வாறே, பல்வேறு நிலைகளைச் சேர்ந்த தனி நபர் வாரி செலவை பிரித்துப்பார்க்கும்போது பல்வகை நகராட்சிகளிடையேயும், ஒரே வகையைச் சேர்ந்த நகராட்சிகளுக்குள்ளும் வேறுபாடுகள் காணப்படுவதை இணைப்பு எண் 115 லுள்ள விவர அட்டவணையில் காணலாம். ஒவ்வொரு நிலைகளுக்குள்ளும் பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக, இரண்டாம் நிலை நகராட்சிகளில் காணப்படும் வேறுபாடுகள் மிகவும் அதிகமாகும். தனி நபர் வாரியான செலவை, வழங்கிய பணிகளை அளவிடுவதற்கான குறியீடாக எடுத்துக் கொண்டால், பணி அளவுகளில் நகராட்சிகளிடையே பெரும் வேறுபாடுகள் இருப்பதாகக் கூறமுடியும். பல்வேறு நிலைகளைச் சேர்ந்த பல்வேறு மக்கள் தொகை அளவினைக் கொண்ட நகராட்சிகளின் நிதி மேலாண்மை கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

அட்டவணை 5.6. நிதி மேலாண்மை

| நிலை | தனி நபர் வாரி சொந்த வருவாய் (ரூபாயில்) | மக்கள் தொகை அளவு | தனி நபர் வாரி சொந்த வருவாய் (ரூபாயில்) |
|---|---|---|---|
| சிறப்பு நிலை | 159.38 | 0 முதல் 25000 | 115.01 |
| தேர்வு நிலை | 129.19 | 25000 முதல் 50000 | 144.05 |
| முதல் நிலை | 128.30 | 50000 முதல் 75000 | 119.88 |
| இரண்டாம் நிலை | 101.54 | 75000 முதல் 100000 | 151.53 |
| மூன்றாம் நிலை | 90.02 | ஒரு இலட்சத்திற்கு மேல் | 124.60 |
| அனைத்து நிலைகளும் சேர்த்து | 129.69 | மொத்த மக்கள் தொகைக்கு | 129.69 |

அட்டவணை 5.7. மொத்த வரவு செலவுகளில் சொந்த வருவாயின் சதவீதம்

| நிலை | சொந்த வருவாயின் சதவீதம் | |
|---|---|---|
| | வரவுகளில் | செலவுகளில் |
| சிறப்பு நிலை | 66.03 | 73.25 |
| தேர்வு நிலை | 68.51 | 75.47 |
| முதல் நிலை | 66.64 | 72.31 |
| இரண்டாம் நிலை | 65.86 | 64.77 |
| மூன்றாம் நிலை | 69.36 | 72.56 |
| அனைத்து நிலைகளும் சேர்த்து | 66.79 | 71.99 |

அட்டவணை 5.8. நகராட்சிகளின் மக்கள்தொகை அளவிற்கு ஏற்ப:–

| மக்கள்தொகை அளவு | சொந்த வருவாயின் சதவீதம் | |
|---|---|---|
| | வரவுகளில் | செலவுகளில் |
| 0 – 25000 | 76.25 | 79.83 |
| 25000 – 50000 | 69.74 | 72.20 |
| 50000 – 75000 | 66.19 | 68.11 |
| 75,000 – ஒரு இலட்சம் | 67.65 | 72.29 |
| ஒரு இலட்சத்திற்கு மேல் | 65.07 | 74.13 |
| மொத்த மக்கள் தொகைக்கு | 66.79 | 71.99 |

**5.3.24.** மானியங்களை ஒதுக்கீடு செய்வதில் குறைபாடுகள் இருப்பதை மேற் சொன்ன வகைப்பாடுகள் உணர்த்துகின்றன. சராசரி தனி நபர் சொந்த வருவாய்க்குக் குறைவாக வருவாய் கொண்டுள்ள 27 நகராட்சிகள் சராசரிக்கும் கூடுதலான மானியத் தொகையையும் சராசரி தனி நபர் சொந்த வருவாய்க்கும் அதிகமாக வருவாய் கொண்ட 17 நகராட்சிகள், சராசரிக்கும் குறைவான மானியத் தொகையையும் மாநில அரசிடமிருந்து பெற்றுள்ளன. ஆனால், சராசரிக்கும் குறைவான சொந்த வருவாயைப் பெற்றுள்ள 40 நகராட்சிகளுக்கு சராசரிக்கும் குறைவான மானியமே வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்று, சராசரி தனி நபர் சொந்த வருவாய்க்கும் அதிகமாக சொந்த வருவாய் பெற்றுள்ள 19 நகராட்சிகளுக்கு சராசரிக்கும் கூடுதலான மானியம் வழங்கப்பட்டுள்ளது. சராசரிக்கும் குறைவான சொந்த வருவாயைப் பெற்றுள்ள நகராட்சிகள் பாதிக்கப்பட்டு வருகின்றன என்பதையும் மானியம் வழங்குவதற்கான பொதுவான கொள்கை கடைப்பிடிக்கப்படவில்லை என்பதையும் இது காட்டுகிறது. இது மாநில அரசின் நிதிப் பகிர்ந்தளிக்கும் கொள்கையின் குத்து மதிப்பு தன்மையை உணர்த்துகிறது. வரி வசூல் மேலாண்மையும் மிகக் குறைவாக உள்ளது என்பதையும் நமக்கு எடுத்துக் காட்டுகிறது. பொது நோக்கு வரி முக்கியமான கூறாக இருக்கின்ற இரண்டாம், மூன்றாம் நிலைகளைச் சேர்ந்த நகராட்சிகளைத் தவிர, ஏனைய அனைத்து நிலை நகராட்சிகளிலும் தண்ணீர் வரி முக்கியக் கூறாக இருந்து வந்த போதிலும், தண்ணீர் வரிக் கூறுகள் பெருமளவில் வேறுபடுகின்றன. வெவ்வேறு கூறுகளின் பங்குகளும் பெருமளவு வேறுபடுகின்றன; இந்த, வரி வீதங்கள் விருப்ப உரிமை அடிப்படையிலானவை என்பதையே காட்டுகின்றன.

## இ. பேரூராட்சிகள்

**5.3.25.** பேரூராட்சிகளின் வருவாய்க் கணக்கின் வரவுகள், செலவுகள் மூலதனக் கணக்கின் வரவுகள், செலவுகள் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:–

அட்டவணை 5.9. பேரூராட்சிகளில் ஒட்டு மொத்த வரவு – செலவுத் திட்டங்கள்

| விவரங்கள் | 1991–92 | | 1992–93 | | 1993–94 | | 3 ஆண்டு சராசரி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை (ரூ. இலட்சத்தில்) | தனி நபர் வாரி (ரூபாயில்) | தொகை (ரூ. இலட்சத்தில்) | தனி நபர் வாரி (ரூபாயில்) | தொகை (ரூ. இலட்சத்தில்) | தனி நபர் வாரி (ரூபாயில்) | தொகை (ரூ. இலட்சத்தில்) | தனி நபர் வாரி (ரூபாயில்) |
| வருவாய்க்கணக்கு : | | | | | | | | |
| வரவுகள் | 6330.35 | 72.10 | 7124.61 | 81.71 | 8700.80 | 99.10 | 7401.92 | 84.30 |
| செலவுகள் | 5426.06 | 61.80 | 6359.77 | 72.43 | 7705.31 | 87.76 | 6497.05 | 74.00 |
| உபரி | 904.28 | 10.30 | 814.84 | 9.28 | 995.49 | 11.34 | 904.87 | 10.31 |
| மூலதனக் கணக்கு: | | | | | | | | |
| வரவுகள் | 1772.32 | 20.19 | 2527.85 | 28.79 | 2793.75 | 31.82 | 2364.64 | 26.93 |
| செலவுகள் | 1891.05 | 21.54 | 2407.16 | 27.42 | 3198.03 | 36.42 | 2498.75 | 28.46 |
| உபரி | –118.74 | –1.35 | 120.69 | 1.37 | –404.28 | –4.60 | –134.11 | –1.53 |
| மொத்தம் : | | | | | | | | |
| வரவுகள் | 8102.67 | 92.28 | 9702.46 | 110.51 | 11494.56 | 130. 92 | 9766.56 | 111.24 |
| செலவுகள் | 7317.12 | 83.34 | 8766.93 | 99.85 | 10903.34 | 124.18 | 8995.80 | 102.46 |
| உபரி | 785.55 | 8.95 | 935.53 | 10.66 | 591.21 | 6.73 | 770.76 | 8.78 |

5.3.26. 1993–94 ஆம் ஆண்டில், வருவாய்க் கணக்கில் ரூ.9.95 கோடி உபரி ஏற்பட்டுள்ளது என்று ஒட்டு மொத்த நிலை சுட்டிக்காட்டுகிறது. சென்ற மூன்றாண்டுகளுக்கான சராசரி உபரி ரூ. 9.05 கோடி ஆக இருந்தது. 1993–94 ஆம் ஆண்டில் மூலதனக் கணக்கு ரூ.4.04 கோடி பற்றாக்குறையுடன் முடிந்தது. 1992–93 ஆம் ஆண்டைத் தவிர, மற்றைய ஆண்டுகளில் மூலதனக் கணக்கில் பற்றாக்குறைதான் இருந்து வந்துள்ளது. மூலதனக் கணக்கில் சராசரி பற்றாக்குறை ரூ.1.34 கோடியாக இருந்தது. ஆனால், 1993–94 இல் மொத்தத்தில் நிகர உபரி ரூ.5.91 கோடியாகும். காலங்கடந்து பாக்கியாக இருந்து வருகின்ற தீர்க்கப்பட வேண்டிய கடன் தொகைகள் இதில் கணக்கில் கொள்ளப்படவில்லை. மேலும், ஏனைய பொறுப்புகளுக்கு அதாவது, ஓய்வூதிய பங்குத்தொகை வேறு செலவுக்காகப் பயன்படுத்தப்பட்ட வருங்கால வைப்பு நிதி வைப்பீடுகள் ஆகியனவும் கணக்கில் கொள்ளப்படவில்லை. 1993–94 ஆம் ஆண்டு இறுதி நிலவரப்படியான பொறுப்புகள் வருமாறு:

| பொறுப்புகள் | ரூபாய் கோடியில் |
|---|---|
| காலங்கடந்த கடன் தொகை (வட்டியுடன்) | 47.92 |
| வழிவகை முன்பணம் | 9.15 |
| ஓய்வூதிய பங்குத்தொகைகள் | 2.22 |
| வெறு செலவுகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட வருங்கால வைப்புநிதி | 1.92 |
| வருங்கால வைப்பு நிதிக் கணக்கில் செலுத்தப்பட வேண்டிய ஐந்தாவது ஊதியக்குழு நிலுவைத் தொகை | 0.81 |
| மொத்தம் | 62.02 |

| | ரூபாய் இலட்சத்தில் | |
|---|---|---|
| வருவாய் உபரி | 995.49 | |
| மூலதனப் பற்றாக்குறை | (–) 404.28 | |
| நிகர உபரி | 591.21 | அல்லது |
| | (+) 5.19 | கோடி |
| இறுதி நிதி நிலவரம் | (–) 56.11 | |

**5.3.27.** பேரூராட்சிகளின் மொத்த பொறுப்புகள் சுமார் ரூ.62 கோடி ஆகும். இதனால், பேரூராட்சிகளின் ஒட்டு மொத்த நிதி நிலைமையில் ரூ.56.11 கோடி மொத்த பற்றாக்குறை ஏற்பட்டது. வருவாய் உபரி மற்றும் பற்றாக்குறை வகையாகவும், வருவாய் வரவுகள் மற்றும் செலவுகள் வகையாகவும் பேரூராட்சிகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**அட்டவணை 5.10. வருவாய் உபரி/பற்றாக்குறைக்கு ஏற்ப பேரூராட்சிகளின் வகைப்பாடு**

| தொகை ரூபாயில் | 1991–92 | | 1992–93 | | 1993–94 | |
|---|---|---|---|---|---|---|
| | உபரி | பற்றாக்குறை | உபரி | பற்றாக்குறை | உபரி | பற்றாக்குறை |
| 50,000 வரை | 114 | 146 | 110 | 143 | 78 | 98 |
| 50,000 – 1 இலட்சம் | 51 | 59 | 44 | 61 | 55 | 54 |
| 1 இலட்சம் – 2 இலட்சம் | 57 | 63 | 53 | 38 | 83 | 51 |
| 2 இலட்சம் – 3 இலட்சம் | 43 | 10 | 33 | 20 | 43 | 20 |
| 3 இலட்சத்திற்கு மேல் | 76 | 17 | 101 | 33 | 117 | 37 |
| மொத்தம் | 341 | 295 | 341 | 295 | 376 | 260 |

உபரி என்பதன் கீழ் காட்டப்பட்டுள்ள பேரூராட்சிகளின் நிலை, பொறுப்புகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் பற்றாக்குறை என்ற தலைப்புக்கு மாறிவிடலாம்.

**அட்டவணை 5.11. வருவாய்க் கணக்கில் வரவுகள் மற்றும் செலவுகளுக்கேற்ப, பேரூராட்சிகளை வகைப்படுத்துதல்**

| தொகை (ரூபாயில்) | 1991–92 | | 1992–93 | | 1993–94 | | 3 ஆண்டு சராசரி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் |
| **வருவாய்க் கணக்கில் வரவுகள்** | | | | | | | | |
| 5 இலட்சம் வரை | 247 | 39 | 202 | 32 | 115 | 18 | 180 | 28 |
| 5 இலட்சம் – 10 இலட்சம் | 193 | 30 | 204 | 32 | 236 | 37 | 220 | 35 |
| 10 இலட்சம் – 15 இலட்சம் | 79 | 12 | 87 | 14 | 98 | 15 | 89 | 14 |
| 15 இலட்சம் – 20 இலட்சம் | 53 | 8 | 54 | 8 | 64 | 10 | 50 | 8 |
| 20 இலட்சம் – 25 இலட்சம் | 19 | 3 | 39 | 6 | 45 | 7 | 42 | 7 |
| 25 இலட்சத்திற்கு மேல் | 45 | 7 | 50 | 8 | 78 | 12 | 55 | 9 |
| மொத்தம் | 636 | 100 | 636 | 100 | 636 | 100 | 636 | 100 |

| தொகை (ரூபாயில்) | 1991–92 | | 1992–93 | | 1993–94 | | 3 ஆண்டு சராசரி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் |
| **வருவாய்க் கணக்கில் செலவுகள் :** | | | | | | | | |
| 5 இலட்சம் வரை | 247 | 39 | 225 | 35 | 145 | 23 | 199 | 31 |
| 5 இலட்சம் – 10 இலட்சம் | 214 | 34 | 201 | 32 | 229 | 36 | 219 | 34 |
| 10 இலட்சம் – 15 இலட்சம் | 87 | 14 | 83 | 13 | 93 | 15 | 88 | 14 |
| 15 இலட்சம் – 20 இலட்சம் | 47 | 7 | 64 | 10 | 61 | 10 | 60 | 9 |
| 20 இலட்சம் – 25 இலட்சம் | 13 | 2 | 26 | 4 | 47 | 7 | 30 | 5 |
| 25 இலட்சத்திற்கு மேல் | 28 | 4 | 37 | 6 | 61 | 10 | 40 | 6 |
| மொத்தம் | 636 | 100 | 636 | 100 | 636 | 100 | 636 | 100 |

**5.3.28.** சுமார் 376 பேரூராட்சிகள் ரூ.3 இலட்சம் வரையில் உபரி நிதிநிலை கொண்டவையாகவும் 260 பேரூராட்சிகள், பற்றாக்குறை நிதி நிலைமை கொண்டவையாகவும் உள்ளன என்பதை இந்த புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. அவற்றில், 78 பேரூராட்சிகள் சொற்ப அளவாக அதாவது ரூ.50,000 வரை மட்டுமே உபரித் தொகை கொண்டுள்ளன. 162 பேரூராட்சிகள் ரூ.50,000 க்கும் அதிகமாகப் பற்றாக்குறை கொண்டவையாக உள்ளன. மாநில அளவில் அனைத்து பேரூராட்சிகளின் நிலைமையை ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது, உபரியான நிலை இருந்தாலும் அப்பேரூராட்சிகளில் சுமார் 25 சதவீதம் பற்றாக்குறையில் உள்ளன என்பதே இதன் பொருளாகும். தனி நபர் வருமானத்தை மதிப்பிடும்போது, பேரூராட்சிகளில் குறைவான மக்கள் தொகை காரணமாக, தனி நபர் வருமானம் அதிகமாக இருந்ததால், முன்னாள் நகரியமாக இருந்த 12 பேரூராட்சிகள் ஆய்வில் சேர்க்கப்படவில்லை. இந்த நகரியங்கள் வெவ்வேறு காரணங்களின் பேரில் அதாவது, தொழிற்சாலைகள், தொல்பொருளியல் மற்றும் ஏனைய சிறப்புக் கூறுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன.

**5.3.29.** மொத்த வருவாய்க் கணக்கிலான வரவுகள், உயர் நிலைப் பேரூராட்சிகளில் அதிகமாகவும் கீழ் நிலைப் பேரூராட்சிகளில் குறைவாகவும் இருப்பது கண்டறியப்பட்டது. இரண்டாம் நிலை பேரூராட்சிகளில் தனி நபர் வருமானம் ரூ.50.31 ஆகும்; சிறப்பு நிலைப் பேரூராட்சிகளில் தனி நபர் வருமானம் ரூ.193.95 ஆகும். இது சிறு பேரூராட்சிகளின் தனி நபர் வருமானத்தைப்போல் சுமார் நான்கு மடங்கு ஆகும். மக்கள் தொகை வேறுபாடு பேரூராட்சிகளில் வருவாய் வேறுபாடுகள் மிகவும் அதிகமாக உள்ளது. 10,000 க்கும் குறைவான மக்கள் தொகையுடைய பேரூராட்சிகளிலும், முதல் நிலைப் பேரூராட்சிகளிலும், தனி நபர் வருவாய் வரவுகளில் அதிகமான வேறுபாடுகள் இருப்பது கண்டறியப்பட்டது.

**5.3.30.** மொத்த வருவாயைப் பொறுத்தவரை பேரூராட்சிகளின் நிலைக்கேற்ப, சொந்த வரி வருவாய் சீராக அதிகரித்து வந்துள்ளது. இரண்டாம் நிலை பேரூராட்சிகளின் தனி நபர் சொந்த வரி வருமானம் ரூ.16.41 ஆகும்; சிறப்பு நிலை பேரூராட்சிகளின் தனி நபர் சொந்த வரி வருமானம் ரூ.73.87 ஆகும்; இது, சிறு பேரூராட்சிகளின் தனி நபர் சொந்த வரி வருமானத்தை விட ஏறக்குறைய 3.5 மடங்கு அதிகமாகும். சிறப்பு நிலை மற்றும் தேர்வு நிலைப் பேரூராட்சிகளில், சொந்த வரி மூலம் கிடைத்த தனி நபர் வருமானம், மாநில சராசரியை விட அதிகமாக இருந்தது. சிறு பேரூராட்சிகள், தங்கள் வரி வருவாய் வளங்களைப் பயன்படுத்துவதற்கு சாதகமற்ற நிலை உள்ளது என்பதை இந்தப் புள்ளி விவரங்கள் சுட்டிக் காட்டுகின்றன; அதேபோன்று, மக்கள்தொகை அளவுகோலின் அடிப்படையில்

பேரூராட்சிகளைப் பார்த்தால், 5000–க்கும் 10000க்கும் இடைப்பட்ட மக்கள்தொகை கொண்ட பேரூராட்சிகள், மாநில சராசரியை விட குறைவான வருவாயைப் பெற்றிருக்கின்றன. இந்தக் கடும் வேறுபாடு ஒரே அடுக்கைச் சேர்ந்த பேரூராட்சிகளிடையே ஏற்றத் தாழ்வுகள் இருப்பதை உணர்த்துகின்றன. பேரூராட்சிகளின் வரி கட்டமைப்பிற்கேற்ப, ஒரே மாதிரியான காரணிகளையும் மற்றும் வரி வீதங்களையும் அனைத்து பேரூராட்சிகளுக்கும் பயன்படுத்துவதனால் பேரூராட்சிகளின் வரி அடிப்படையை பொறுத்து, வெவ்வேறு அளவுகளில் வருவாய் பெறும் நிலை உள்ளது. அதேபோன்று, ஒரே நிலைப் பேரூராட்சிகளுக்குள்ளும் அதிக வேறுபாடுகள் காணப்படுகின்றன.

**5.3.31.** வரி வருவாய்களில், வீட்டு வரி வாயிலாக 1991–92 இல் சுமார் 70 சதவீதமும், 1992–93 இல் 80 சதவீதமும், 1993–94 இல் 50 சதவீதமும் வருமானம் கிடைத்துள்ளது. இதையே தொகையில் சொல்வதானால், 1991–92 இல் கிடைத்த தொகை ரூ.15.69 கோடி ஆகும்; இது, 1993–94 இல் ரூ.16.82 கோடி அளவுக்கு உயர்ந்தது. 1992–93 ஆம் ஆண்டுப் புதிய சட்டத்தின்படி தொழில் வரியின் கீழ் 1993–94–ஆம் ஆண்டில் அதிக வருவாய் கிடைத்ததால், 1993–94–இல் வீட்டு வரியின் உயர் சதவீத அளவு குறைந்தது.

**5.3.32.** அடுத்தபடியாக பெரும் அளவில் வருவாய் ஈட்டித்தரக்கூடிய ஆதாரம் தொழில் வரி ஆகும். 1991–92 இல் இதன் மூலம் கிடைத்த வருவாய் 18.77சதவீதமாக இருந்தது; 1993–94–இல் இது 43.87 சதவீதமாக அதிகரித்தது. ஏனைய சொந்த வரிகளிலிருந்து மிகக் குறைவான சதவீத அளவிலேயே வருவாய் கிட்டியுள்ளது. சராசரியாக, 5 முதல் 6 சதவீதம் தண்ணீர் வரி மூலம் வருவாயாக கிடைத்து வருகிறது.

**5.3.33.** ஒவ்வொரு நிலைப் பேரூராட்சிகளிலும், வீட்டு வரி மற்றும் தொழில் வரி ஆகிய இரண்டின் கீழும் கிடைத்த வருவாய் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:–

**அட்டவணை 5.12. பேரூராட்சிகளின் வரி வசூல்**

**அ. வீட்டு வரி** (ரூபாய் கோடியில்)

| நிலை | 1991–92 | | 1992–93 | | 1993–94 | |
|---|---|---|---|---|---|---|
| | கேட்பு | வசூல் | கேட்பு | வசூல் | கேட்பு | வசூல் |
| சிறப்பு நிலை | 5.15 | 2.83 (55.01) | 4.70 | 2.61 (55.59) | 5.09 | 3.01 (59.15) |
| தேர்வு நிலை | 16.62 | 9.30 (55.93) | 17.30 | 11.67 (67.42) | 16.91 | 9.96 (58.92) |
| முதல் நிலை | 4.34 | 3.12 (72.03) | 4.59 | 2.99 (65.22) | 4.78 | 3.21 (67.19) |
| இரண்டாம் நிலை | 1.12 | 0.59 (52.88) | 1.06 | 0.59 (55.62) | 1.01 | 0.59 (57.82) |
| அனைத்து நிலைகளும் சேர்த்து | 27.23 | 16.85 (58.20) | 27.66 | 17.86 (64.59) | 27.80 | 16.78 (60.34) |

அட்டவணை 5.13. ஆ. தொழில் வரி (ரூபாய் கோடியில்)

| நிலை | 1991–92 | | 1992–93 | | 1993–94 | |
|---|---|---|---|---|---|---|
| | கேட்பு | வசூல் | கேட்பு | வசூல் | கேட்பு | வசூல் |
| சிறப்பு நிலை | 2.16 | 0.53 (24.42) | 2.20 | 0.36 (16.40) | 3.03 | 1.69 (55.62) |
| தேர்வு நிலை | 8.71 | 1.89 (21.68) | 9.10 | 1.38 (15.20) | 12.72 | 9.14 (71.85) |
| முதல் நிலை | 2.80 | 0.50 (17.62) | 3.59 | 0.36 ( 9.92) | 5.09 | 3.69 (72.50) |
| இரண்டாம் நிலை | 0.58 | 0.10 (17.62) | 0.75 | 0.07 ( 9.68) | 1.08 | 0.84 (77.89) |
| அனைத்து நிலைகளும் சேர்த்து | 14.25 | 3.02 (21.22) | 15.64 | 2.17 (13.89) | 21.92 | 15.36 (70.05) |

குறிப்பு:– கேட்புத்தொகை என்பதில், நடப்பு கேட்புத் தொகையும் முந்தைய ஆண்டுகளின் நிலுவைகளும் அடங்கும்; அடைப்புக் குறியில் உள்ள புள்ளி விவரங்கள், கேட்புத் தொகையில் வசூலான தொகையின் சதவீதத்தைக் குறிப்பிடுகின்றன.

சொந்த வருவாய்

**5.3.34.** சிறப்பு நிலைப் பேரூராட்சிகளில், வசூல் சதவீதம் 1991–92 இல் 55 ஆக இருந்து, 1993–94 இல் 59 சதவீதமாக அதிகரித்தது. அதேபோன்று, தேர்வு நிலைப் பேரூராட்சிகளில் 1992–93 இல் 56 சதவீதத்திலிருந்து 67 சதவீதமாக அதிகரித்தது; ஆனால், 1993–94 இல் 59 சதவீதமாகக் குறைந்தது. முதல் நிலைப் பேரூராட்சிகளில் வசூல் சாதனை மிகச் சிறப்பாக அதாவது, 72 சதவீதம் என்ற அளவில் இருந்தது; ஆனால், இது 1992–93 இல் 65 சதவீதமாகக் குறைந்தது; பின்னர் 1993–94 இல் 67.19 சதவீதமாக உயர்ந்தது. இரண்டாம் நிலைப் பேரூராட்சிகளில், வசூல் 1991–92 இல் சாதனை அளவு 53 சதவீதமாக இருந்தது; 1993–94 இல் 58 சதவீதமாக அதிகரித்தது. அனைத்து நிலைப் பேரூராட்சிகளின் ஒட்டு மொத்த சாதனை 1992–93 இல் சராசரியாக 58 சதவீதம் முதல் 64 சதவீதம் வரையிலும் 1993–94 இல் 60 சதவீதமாகவும் இருந்தது. பேரூராட்சிகளில் குறைந்தளவு வருவாய் இருந்ததற்கான காரணம், குறைவான வரி விதிப்பு மட்டுமல்ல என்பதும், அவற்றிற்கிடையேயான வருவாய் வேறுபாடுகளுக்கு மிகக் குறைந்த வசூலும் காரணம் என்பதும் இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து தெரிய வருகிறது. ஒவ்வொரு ஆண்டும், சுமார் 40 சதவீத வரி வசூலிக்கப்படாமலேயே நின்று விடுகிறது என்பதும், இதனால் கணிசமான தொகை நிலுவை ஏறிக்கொண்டே போகிறது என்பதும் மேற்கூறியவற்றிலிருந்து தெரியவருகிறது. பேரூராட்சிகளில் கூடுதல் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கு வரிக் கட்டமைப்பைச் சீரமைப்பதற்கு முன்னரே, வசூலைப் பெருக்க நிவாரண முறை எடுத்தால் தனி நபர் வருமானத்தைக் கண்டிப்பாக உயர்த்தும். நிருவாக எந்திரத்தை முடுக்கிவிடாமல், கூடுதல் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கு மேற்கொள்ளும் எந்த முயற்சியும் நல்ல பலனை அளிக்காது என்பதும் தெளிவாகிறது.

**5.3.35.** தொழில் வரியின் நேர்விலும்கூட 1991–92 இல் மொத்த வசூல் 21 சதவீதம் மட்டுமே என்பதும், 1993–94 இல் இது 70 சதவீதம் அளவுக்குக் கணிசமாக அதிகரித்துள்ளது என்பதும் தெரிகிறது. வரி வசூல் குறித்து அதிக கவனம் செலுத்தும் வகையில் நிருவாகக் கட்டமைப்பை முடுக்கிவிட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்படவேண்டும்.

வரி அல்லாதவை

**5.3.36.** 1993–94 இல் வரி அல்லாத இனம் மூலம் கிடைத்த வருவாய் சுமார் 26.75 சதவீதம் ஆகும்; இதன் தனி நபர் வருமானம் ரூ.26.51 ஆகும். வரியல்லாத வருவாய்களில், சொத்துக்கள் மூலம் கிடைத்த வருவாய், சராசரியாக 39 சதவீதம் முதல் 41 சதவீதம் வரையில் இருந்தது. அடுத்தது, பயனீட்டாளர் கட்டணங்கள்; இதன் மூலம், 25 சதவீதம் முதல் 28 சதவீதம் வரையில் வருவாய் இருந்தது. இதனை நிலை வாரியாக (Grade-wise) ஆராய்ந்தால், சராசரி வருவாய் உயர் நிலைப் பேரூராட்சிகளில் அதிகமாக இருந்தது; அதாவது சிறப்பு நிலைப் பேரூராட்சிகளில் 60.2 சதவீதமும், இரண்டாம் நிலைப் பேரூராட்சிகளில் 10.46 சதவீதமாகவும் இருந்தது. அனைத்து வகைகளுக்குள் வேறுபாடுகளும், ஒரே வகைக்குள்ளேயே காணப்படுகின்ற வேறுபாடுகளும் மிக அதிகமாகவும், நிலை உயரும்போது வருவாயும் அதிகமாக இருந்தது என்பது மாறுபாடுகளின் குணகங்களும் வேறுபாட்டின் தரமமும் ( Standard Deviation and Coefficient of variation) தெரிவிக்கின்றன. பயனீட்டாளர் கட்டணங்களில் உள்ள வித்தியாசங்களையும், நிருவாக எந்திரத்தில் காணும் குறைபாடுகளையும் இந்த வேறுபாடுகள் பிரதிபலிக்கின்றன.

ஒப்படை செய்யப்பட்ட/பகிர்ந்தளிக்கப்பட்ட வரிகள்

**5.3.37.** ஒப்படை செய்யப்பட்ட/பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் மூலம் மொத்த வருவாயில் சராசரியாக சுமார் 34 சதவீத வருவாய் கிட்டியது. சராசரி தனி நபர் வருமானம் ரூ.28.70 ஆக இருந்தது. இந்த ஆதாரம் மூலம் கிடைத்த வருவாயுங்கூட பல்வேறு நிலைகளுக்கிடையே (Grade) மிகவும் வேறுபடுகிறது; அதாவது, இரண்டாம் நிலைப் பேரூராட்சியில் ரூ.19.42–ம், சிறப்பு நிலைப் பேரூராட்சியில் ரூ.46.56–ம் உள்ளது. இந்த இனத்தின் கீழ்க்கூட, பல்வேறு நிலைகளுக்கிடையிலும் ஒரே நிலைக்குள்ளும் வேறுபாடுகள் இருப்பதை வேறுபாடுகளின் தரம் மற்றும் குணகத் தொகைகள் தெரிவிக்கின்றன. பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய்களில், இந்த எல்லா ஆண்டுகளிலுமே முத்திரைத்தாள் தீர்வை மீதான மேல்வரி மூலமான வருவாய் 83 சதவீதத்திற்கும் 84 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவிலேயே இருந்து வந்தது. இதற்கு அடுத்தபடியாக கேளிக்கை வரியிலிருந்து சுமா் 13 சதவீத வருவாய் கிட்டியது. ஏனைய வரிகள் மிகவும் சொற்பமாகவே இருந்தன. விற்பனை வரி மீதான மேல்வரி மூலம் கிடைத்த வருவாய் 1991–92 – ல் 1.29 சதவீதமாகவும், 1992–93–ல் 2.46 சதவீதமாகவும், 1993–94–ல் 1.23 சதவீதமாகவும் இருந்தது. இந்த வருவாயின் கீழ்ப் பகிர்ந்தளிக்கப்படும் தொகை, குறைந்து வந்துள்ளதை இந்தப் புள்ளி விவரம் காட்டுகிறது. தற்போதுள்ள பங்கீட்டு முறை, இருக்கின்ற ஏற்றத்தாழ்வைச் சீர்படுத்துவதற்குப் பதிலாக, அதை மேலும் அதிகப்படுத்தியுள்ளது என்பதையே இந்த வேறுபாடுகள் உணர்த்துகின்றன.

மானியங்கள்

**5.3.38.** உதவி மானியங்கள் மூலம் கிடைத்த வருவாய் சுமார் 3 முதல் 4 சதவீதம் வரையில் மட்டுமே; தனி நபர் வருமானம், ரு.2.47 முதல் ரூ.3.41 வரை ஆகும். மானியங்களில் பொது நோக்கு மானியம் மற்றும் சாலை மானிய சதவீத அளவு அதிகமாக இருந்தது. அதேபோன்று, ஒரு சில பேரூராட்சிகளுக்கு மட்டுமே வழங்கப்படும் ஊக்க மானியங்கள் மூலமாக மொத்த மானியத்தில் சுமார் 10.96 சதவீதம் கிடைத்துள்ளது. மானியங்களின் நிலைமை குறித்து பேரூராட்சிகளின் நிலை

வாரியாகப் பகுப்பாய்வு செய்ததில், நிலை இரண்டு பேரூராட்சியில், சராசரி தனி நபர் வருமானம், ரூ.4.03–ம், சிறப்பு நிலைப் பேரூராட்சியில் ரூ.4.65 ஆகவும் இருந்தன. மக்கள் தொகை அடிப்படையில் இது பற்றி பகுப்பாய்வு செய்ததில் பெரும் அளவிலான வேறுபாடுகள் இருப்பது தெரிய வந்தன. கீழ்நிலையில் உள்ள பேரூராட்சிகள் தங்கள் நிதி ஆதாரங்களிலிருந்து வருவாய் திரட்டிக் கொள்ள அவற்றுக்குள்ள திறனை சமன்படுத்தத் தேவையான நிதிகள் கிடைக்கும் வகையில், இந்த மானியங்கள் வழங்கும் முறை அவற்றிற்கு உதவிடவில்லை. செலவுகளைப் பகுப்பாய்வு செய்ததில், தனி நபர் வருமானத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட வருவாயிலும் ஒவ்வொரு நிலைக்குள்ளும் பெருத்த வேறுபாடுகள் இருப்பது தெரிய வந்தது. இந்த அளவீடுகளைப் பணி அளவைக் காட்டும் குறியீடாக எடுத்துக் கொண்டால், பேரூராட்சிகளுக்கிடையே பணி அளவுகளில் கடுமையான வேறுபாடுகள் காணப்படுகின்றன. போதிய அளவுக்கு வசதிகளைச் செய்துதர பேரூராட்சிகளின் தனி நபர் வருமானம் மிகவும் குறைவாக உள்ளது என்பதையும் பேரூராட்சிகளிடையே அளித்துள்ள வசதிகளிலும் பெருத்த வேறுபாடுகள் உள்ளன என்பதையும் மேலே கூறப்பட்ட பல்வேறு அளவுகோல்கள் தெளிவுபடுத்துகின்றன. வருவாய் ஆதாரங்கள் முழு அளவில் பயன்படுத்தப்படவில்லை. வரி வருவாய் மற்றும் வரியல்லாத வருவாய் குறித்த பரிந்துரைத்துள்ள சீரமைப்புகள் மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய்களை, உத்தேச அறிவியல் முறையிலான பரிந்துரைத்துள்ள மாற்று ஒப்படை முறைப்படி மறுபகிர்வு செய்வது ஆகிய நடவடிக்கைகளால் பேரூராட்சிகளின் வருவாய் நிலைமைகள் மேம்பாடு அடைய வாய்ப்புள்ளது. ஆயினும், வருவாய் ஆதாரங்களை முழுமையாகப் பயன்படுத்தி அதன் மூலம் வருவாய் ஈட்ட இயலும் வகையில் வரிச் சீரமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு முன்னர் பேரூராட்சிகளின் நிருவாகத்தை முன்னுரிமை அடிப்படையில் சீர்படுத்த வேண்டியது அவசியமாகும்.

### ஈ. ஊராட்சி ஒன்றியங்கள்

**5.3.39.** வருவாய் கணக்கிலான மொத்த வரவுகள்/செலவுகள், மூலதன கணக்கிலான வரவுகள்/செலவுகள் ஆகியவை குறித்த விவரங்கள், கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:-

**அட்டவணை 5.14. 1989-90 முதல் 1993-94 வரையில் ஊராட்சி ஒன்றியங்களின் தொகுக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டங்கள்**

(ரூபாய் இலட்சத்தில்) (தனி நபர் வருவாய் ரூபாயில்)

| விவரங்கள் | 1989-90 | 1990-91 | 1991-92 | 1992-93 | 1993-94 |
|---|---|---|---|---|---|
| **வருவாய்க் கணக்கிலான விவரங்கள்** | | | | | |
| தொகை | 20538.04 | 24975.61 | 26169.04 | 29644.82 | 38731.59 |
| தனி நபர் வருமானம் | 63.19 | 76.85 | 80.52 | 91.22 | 119.18 |
| **வருவாய்க் கணக்கிலான செலவுகள்** | | | | | |
| தொகை | 19979.56 | 23014.36 | 22548.93 | 24894.02 | 32508.81 |
| தனிநபர் செலவு | 61.48 | 70.81 | 69.38 | 76.60 | 100.03 |
| வருவாய் உபரித் தொகை | 558.48 | 1961.25 | 3620.11 | 4750.80 | 6222.78 |
| தனி நபர் உபரித் தொகை | 1.72 | 6.03 | 11.14 | 14.62 | 19.15 |
| **மூலதனக் கணக்கிலான வரவுகள்** | | | | | |
| தொகை | 783.61 | 1247.14 | 1126.03 | 1177.43 | 1107.60 |
| தனி நபர் வருமானம் | 2.41 | 3.84 | 3.46 | 3.62 | 3.41 |
| **மூலதனக் கணக்கிலான செலவுகள்** | | | | | |
| தொகை | 1274.51 | 1505.91 | 1824.53 | 1972.23 | 2157.92 |
| தனி நபர் செலவினம் | 3.92 | 4.63 | 5.61 | 6.07 | 6.64 |
| **மூலதனக் கணக்கிலான உபரி/பற்றாக்குறை** | | | | | |
| தொகை | (-)490.90 | (-)258.77 | (-)698.50 | (-)794.80 | (-)1050.32 |
| தனி நபர் பற்றாக்குறை | 1.51 | 0.80 | 2.15 | 2.45 | 3.23 |
| **மொத்த வரவுகள்** | | | | | |
| தொகை | 21321.65 | 26222.75 | 27295.07 | 30822.25 | 39839.19 |
| தனி நபர் வருமானம் | 65.61 | 80.69 | 83.99 | 94.84 | 122.58 |
| **செலவுகள்** | | | | | |
| தொகை | 21254.07 | 24520.27 | 24373.46 | 26866.25 | 34666.73 |
| தனி நபர் செலவுகள் | 65.40 | 75.45 | 75.00 | 82.67 | 106.67 |
| நிகர உபரித் தொகை | 67.58 | 1702.48 | 2921.61 | 3956.00 | 5172.46 |
| தனி நபர் உபரித்தொகை | 0.21 | 5.24 | 8.99 | 12.17 | 15.92 |

**5.3.40.** வருவாய்க் கணக்கின் கீழ், 1993–94 ஆம் ஆண்டு இறுதியில், ரு.62.22 கோடி உபரியும், தனி நபர் உபரி ரூ.19.15 ஆகவும் இருந்தது. மூலதனக் கணக்கில், ரு.10.50 கோடிப் பற்றாக்குறைக் காணப்படுகிறது. தனி நபர் பற்றாக்குறை (–) ரூ.3.23 ஆகும்.

**5.3.41.** ஒட்டு மொத்த நிகர நிலவரத்தைப் பார்த்தால், ரு.51..72 கோடி உபரியும், தனி நபர் உபரி ரூ.15.92 ஆகவும் உள்ளது. வருவாய் உபரி மற்றும் பற்றாக்குறைக்கேற்ப, ஊராட்சி ஒன்றியங்களின் வகைப்பாடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. பத்தி 5.3.47–ல் குறிப்பிடப்பட்டுள்ள காரணமாகவே உபரி தொகை ஏற்பட்டது.

**அட்டவணை 5.15. வருவாய்க் கணக்கில் வரவுகள் மற்றும் செலவுகளின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களின் வகைப்பாடு**

| தொகை (ரூஇலட்சத்தில்) | வருவாய்க் கணக்கில் வரவுகள் | | | | | வருவாய்க் கணக்கில்செலவுகள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 89–90 | 90–91 | 91–92 | 92–93 | 93–94 | 89–90 | 90–91 | 91–92 | 92–93 | 93–94 |
| 25 வரை | 47 | 25 | 18 | 12 | 7 | 59 | 35 | 29 | 19 | 13 |
| 25–50 | 137 | 94 | 99 | 75 | 28 | 144 | 112 | 134 | 114 | 46 |
| 50–75 | 128 | 148 | 131 | 124 | 77 | 118 | 147 | 137 | 132 | 104 |
| 75–100 | 55 | 75 | 85 | 92 | 107 | 46 | 59 | 51 | 80 | 111 |
| 100க்கும் மேல் | 17 | 42 | 51 | 81 | 165 | 17 | 31 | 33 | 39 | 110 |
| மொத்தம் | 384 | 384 | 384 | 384 | 384 | 384 | 384 | 384 | 384 | 384 |

**அட்டவணை 5.16 வருவாய்க் கணக்கில் உபரிகள் மற்றும் பற்றாக்குறைக்கேற்ப, ஊராட்சி ஒன்றியங்களின் வகைப்பாடு**

| தொகை (ரூஇலட்சத்தில்) | 1989–90 | | 1990–91 | | 1991–92 | | 1992–93 | | 1993–94 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | உபரி | பற்றாக் குறை | உபரி | பற்றாக் குறை | உபரி | பற்றாக் குறை | உபரி | பற்றாக் குறை | உபரி | பற்றாக் குறை |
| 0 – 2 | 46 | 34 | 36 | 27 | 24 | 22 | 13 | 16 | 13 | 8 |
| 2 – 4 | 42 | 33 | 35 | 23 | 31 | 22 | 28 | 10 | 14 | 17 |
| 4 – 6 | 25 | 27 | 35 | 14 | 17 | 13 | 30 | 9 | 22 | 11 |
| 6 – 8 | 29 | 21 | 19 | 13 | 23 | 12 | 19 | 10 | 17 | 8 |
| 8 – 10 | 22 | 14 | 14 | 9 | 13 | 7 | 15 | 12 | 14 | 3 |
| 10க்கும் மேல் | 58 | 33 | 113 | 46 | 163 | 37 | 185 | 37 | 212 | 45 |
| மொத்தம் | 222 | 162 | 252 | 132 | 271 | 113 | 290 | 94 | 292 | 92 |

**5.3.42.** 1993–94 ஆம் ஆண்டில் 292 ஊராட்சி ஒன்றியங்களில் நிதி நிலைமை உபரியாகவும், 92 ஊராட்சி ஒன்றியங்களில் பற்றாக்குறை நிலவியதையும் மேற்படி விவர அட்டவணைகள் தெரிவிக்கின்றன. அவற்றில், 212 ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.10 இலட்சத்திற்கும் அதிகமாக உபரியும், 45 ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.10 இலட்சத்திற்கும் அதிகமாகப் பற்றாக்குறையும் நிலவுகின்றன. 13 ஊராட்சி ஒன்றியங்கள் ரூ.2 இலட்சம் வரை உபரியும், 8 ஊராட்சி ஒன்றியங்கள் ரூ.2 இலட்சம் வரை

பற்றாக்குறையும் கொண்டுள்ளன. மாநில அளவிலான ஒட்டு மொத்த நிலவரத்தைக் கணக்கிட, தீர்க்கப்படாமல் உள்ள பொறுப்புகள் கணக்கில் கொள்ளப்படவில்லை. சாதாரணமாக ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்புகள் நகர்ப்பகுதி அமைப்புகளுடன் ஒப்பிடுகையில், மிகவும் குறைவு.

**5.3.43.** 1989–90 ஆம் ஆண்டில், வருவாய் கணக்கிலான மொத்த வருவாய் ரூ.205.30 கோடியாக இருந்தது. இது1993–94 ஆம் ஆண்டில் ரூ.387.32 கோடியாக அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பு, ஏறக்குறைய 88 சதவீதம் என கணக்கிடப்பட்டுள்ளது. தனி நபர் வருமானம் ரூ.63.19–லிருந்து ரூ.119.18 ஆக அதிகரித்துள்ளது. இருப்பினும், இந்தத் தனி நபர் வருமானம் ஊராட்சி ஒன்றியங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்குப் போதாத அளவுக்கு மிகக் குறைவாக உள்ளது.

**5.3.44.** ஊராட்சி ஒன்றியங்களின் மொத்த வருமானத்தில், 85 சதவீதத் தொகை, மானியத்திலிருந்து கிடைத்ததாகும். தனி நபர் கணக்கின்படி, இத்தொகை 1989–90 ஆம் ஆண்டில் ரூ.52.31 ஆகும். இது, 1993ஆம் ஆண்டில், ரூ.100.81 வரை அதிகரித்துள்ளது. இது ஏறக்குறைய இரு மடங்காகும். இந்த மானியங்களில், வளர்ச்சி மானியங்கள் வகைகளிலிருந்து 77 சதவீதத்தொகை கிடைத்தது. அதில், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்ட மூலம் மட்டிலும் 64 சதவீத மானியம் பெறப்பட்டது.

**5.3.45.** வரி அல்லாத வருவாய் மிகக் குறைவாக, 6.58 சதவீதம் அளவிலேயே உள்ளது. சொந்த வரி வருவாயும் பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாயும் மிகக் குறைவாக முறையே 5.3 சதவீதம், 8.91 சதவீதம் என்ற அளவிலேயே இருந்தன. இந்த வருவாய்கள் ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் வருவாய், ஊராட்சி ஒன்றியங்களுக்கிடையே பெருமளவில் வேறுபட்டன.

**5.3.46.** 1989–90 ஆம் ஆண்டில் சொந்த வரி வகையிலான வருவாய் மொத்தத்தில் சுமார் 5.3 சதவீதமாகும்; தனி நபர் வருமானத் தொகை ரூ.4.57 ஆகும். 1993–94 ஆம் ஆண்டின் தனி நபர் வருமான அளவு ரூ.6.53 ஆகும். ஊராட்சி ஒன்றியங்களுக்கு உள்ள ஒரே ஒரு சொந்த வரி வருவாய் ஆதாரம் உள்ளூர் செஸ் மேல் வரி மட்டுமேயாகும். தொகை அளவில் 1992–93 ஆம் ஆண்டில் ரூ.15.45 கோடியாகயிருந்த வருவாய், 1993–94 ஆம் ஆண்டில் ரூ.21.24 கோடியாக அதிகரித்திருப்பதைக் காணலாம். இதற்குக் காரணம், 1993 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், சட்டத்தின் மூலம், குறைந்த அளவு உள்ளூர் செஸ் மேல் வரி வீதத்தை, ரு.5 ஆக உயர்த்தியதேயாகும். இந்த உயர்வின் முழுப் பயன் இன்னும் வெளிப்படவில்லை. இந்த வருவாய் ஆதாரத்திலிருந்து மேலும் அதிக வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது; இது, அடுத்தடுத்து வரும் ஆண்டுகளில் தெரியக்கூடும். இதற்கிணையாக இணை மானியங்கள் வழங்கப்படுவதால், ஊராட்சி ஒன்றியங்களின் வருமானம் கணிசமான அளவிற்கு அதிகரிக்க வாய்ப்பிருக்கிறது.

**5.3.47.** கணிசமான தொகையை ஈட்டித் தரும் உள்ளூர் செஸ் மேல்வரி, கல்விக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது என்றும் இதனால், பொது நிதியின் கீழ்வரும் சட்டப்படிக்கானப் பணிகளுக்குத் தேவையான தொகை முடக்கப்பட்டு விடுகிறது என்றும் இங்கு குறிப்பிடுவது சாலப் பொருந்தும். இக்காரணங்களால், ஒட்டு மொத்த உபரி அதிகரித்தது. ஊராட்சி ஒன்றியங்கள், முகவரமைப்புப் பணிகளை மட்டுமே முக்கியமாக கவனித்து வருகின்றன. இப்பணிகளுக்கான நிதியுதவி அரசால் வழங்கப்படுகிறது. பெரும்பாலானத் திட்டங்கள் சார்புத்துறைகாளல் எடுத்துக் கொள்ளப்பட்டதால், சட்டப்படிக்கான பணிகள் முக்கியத்துவம் பெறவில்லை.கட்டாயமாக மேற்கொள்ள வேண்டிய பணிகளில் முக்கியமாக கவனிக்கப்படும். பணி, கிராமங்களை இணைக்கும் சாலைகளின் பராமரிப்பே ஆகும். மொத்தச் செலவில் சுமார் 42 சதவீதம் இதற்காகிறது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அடுத்தபடியாக வருவது சுகாதார நலப் பணியாகும். அதாவது, மருந்தகங்களைப் பராமரிக்கும் பணியாகும். இதற்கு 37.25 சதவீதத் தொகை செலவாகிறது. பள்ளிக் கட்டிடங்கள் போன்ற சொத்துக்களைப் பராமரிப்பதற்கு 20 சதவீதம் செலவாகிறது. வெவ்வேறு ஊராட்சி ஒன்றிய

வகைப்பாடுகளுக்கிடையே தனி நபர் வாரி செலவுகளில், பெரும் வேறுபாடுகள் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும்.

**உ. ஊராட்சிகள்**

**5.3.48.** மொத்த வருவாய் கணக்கிலான வரவுகள்/செலவுகள், மூலதனக் கணக்கிலான வரவுகள்/செலவுகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. ஊராட்சிகளுக்கென மூலதனக் கணக்கு ஏதும் தனியாக வைத்து வரப்படவில்லை. இந்தப் புள்ளி விவரங்களில், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் உட்பட, பெறப்படும் அனைத்து மானியங்களும் அடங்கும்.

**அட்டவணை 5.17 ஊராட்சிகளின் ஒட்டு மொத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு (தொகை ரூபாய் இலட்சத்தில் தனி நபர் வருமானம் ரூபாயில்)**

| ஆண்டு | வருவாய் | | செலவு | | நிகர உபரி/பற்றாக்குறை | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை | தனி நபர் | தொகை | தனிநபர் | தொகை | தனிநபர் |
| 1989–90 | 10366.11 | 31.90 | 9510.97 | 29.26 | 855.14 | 2.63 |
| 1990–91 | 10587.86 | 32.58 | 10948.83 | 33.69 | – 360.97 | – 1.11 |
| 1991–92 | 9883.03 | 30.41 | 8334.60 | 25.65 | 10548.43 | 4.76 |
| 1992–93 | 11769.04 | 36.21 | 10193.24 | 31.36 | 1575.80 | 4.85 |
| 1993–94 | 14206.12 | 43.71 | 12357.02 | 38.02 | 1849.10 | 5.69 |
| ஐந்தாண்டுகளுக்கான சராசரி | 11362.43 | 34.96 | 10268.93 | 31.60 | 1093.50 | 3.36 |
| நிகர உபரி | -- | -- | -- | -- | 5467.50 | 16.82 |

**5.3.49.** 1989–90 ஆம் ஆண்டில் ரூ.103.66 கோடியாக இருந்த ஒட்டு மொத்த வருவாய், 1993–94 ஆம் ஆண்டில் ரூ.142.06 கோடியாக அதிகரித்தது. தனி நபர் வருமானம் ரூ.31.90–யிலிருந்து ரூ.43.71 ஆக அதிகரித்தது. இக்கால அளவில் ஏற்பட்ட உயர்வு 37 சதவீதம் என கணக்கிடப்பட்டுள்ளது. இருப்பினும், தனி நபர் வருமானம் மிகக் குறைவாக இருப்பதால், பணிகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கம் செய்ய இது போதுமானதாக இல்லை.

**5.3.50.** ஊராட்சிகளின் சொந்த வரி வருவாய் 1989–90–ல் 8.3 சதவீதம் ஆக இருந்து 1993–94–ல் 11.9 சதவீதமாக உயர்ந்தது. இதே கால அளவில் தனி நபர் வருமானமும் ரூ.2.64 –லிருந்து ரூ.5.21 ஆக அதிகரித்தது. சொந்த வரி வருவாயில், வீட்டு வரி மூலம் கிடைக்கும் வருவாய் 67.7 சதவீதம் ஆகும். தொழில் வரி மூலம் கிடைக்கும் வருவாய் 18.5 சதவீதம் ஆகும். ஏனைய வரிகளிலிருந்து வருவாய் மிகச் சொற்பமே.

**5.3.51.** கட்டாயப் பணிகள் வகையிலான தனி நபர் செலவு ரூ.16.91 ஆகும். ஊராட்சிகள் தங்களுடைய சொந்த வரி வருமானத்தைக் கொண்டு, இக்கட்டாயப் பணிச் செலவுகளை ஏற்க இயலவில்லை என்பது இதிலிருந்து தெரிகிறது. மொத்த வருவாயில் சராசரி 10.1 சதவீதம் ஆகவுள்ள வரி அல்லாத ஏனைய வருவாய் ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் சராசரி வருமானத்தைச் சேர்த்தாலுங்கூட, மொத்த வருவாயைக் கொண்டு ஊராட்சிகளால் கட்டாயப் பணி செலவுகளை மேற்கொள்ள இயலாது. மொத்த வருவாயில் மானியங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. 1989–90 ஆம் ஆண்டில் இருந்த நிலைமையோடு ஒப்படுகையில் மானியங்கள் 50.21 சதவீதமாக இருந்து, இது 1993–94 ஆம் ஆண்டில் 43.1 சதவீதமாகக் குறைந்திருப்பதைக் காண்கிறோம். ஆனால் தொகை

அளவில் பார்க்குமிடத்து, மானிய வகையிலான வருமானம், 1989–90–ல் ரூ.50 கோடியாக இருந்து 1993–94–ல் ரூ.61.29 கோடியாக அதிகரித்துள்ளது. இம்மானியங்கள், சட்டப்படிக்கான மானியங்கள் 16 சதவீதமும எஞ்சியுள்ளவை வளர்ச்சிப் பணிகளுக்கான மானியங்களாகும். மொத்த வருமானத்தில், பகிர்ந்து அளிக்கப்பட்ட வரி வகையிலான சராசரி வருவாய் ஏறக்குறைய 51.21 சதவீதமாகும். இவற்றில், பகிர்ந்தளிக்கத்தக்க வரி வகையிலான வருவாயில் முத்திரைத்தாள் தீர்வை மீதான மேல்வரி மட்டும் 93 சதவீதம் ஆகும். கேளிக்கை வரி 3.3 சதவீதம் மட்டுமேயாகும். நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களோடு ஒப்பிடுகையில், ஊராட்சிகள் கேளிக்கை வரியினால் அதிகப்பயன் பெறவில்லை என்பதை மேற்சொன்ன நிலை குறிக்கிறது.

5.3.52. மக்கட்தொகை வாரியான வகைப்பாட்டுடன், உபரி, பற்றாக்குறை நிலையில் உள்ள ஊராட்சிகளின் எண்ணிக்கை, மொத்த வருவாய், செலவு அடிப்படையிலான ஊராட்சிகள் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:–

**அட்டவணை 5.18 வருவாய் உபரி, பற்றாக்குறை அடிப்படையிலான ஊராட்சிகளின் வகைப்பாடு**

| தொகை (ரூபாயில்) | 1989–90 | | 1990–91 | | 1991–92 | | 1992–93 | | 1993–94 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | உபரி | பற்றாக் குறை | உபரி | பற்றாக் குறை | உபரி | பற்றாக் குறை | உபரி | பற்றாக் குறை | உபரி | பற்றாக் குறை |
| 0 – 5000 | 2781 | 1684 | 2712 | 1704 | 2923 | 1442 | 2442 | 1422 | 2195 | 1272 |
| 5001 – 25000 | 3077 | 1969 | 2247 | 2723 | 3394 | 1646 | 3205 | 1761 | 3042 | 1779 |
| 25001 – 50000 | 1031 | 494 | 595 | 940 | 1015 | 418 | 1162 | 495 | 1291 | 491 |
| 50001 – ஒரு இலட்சம் | 636 | 295 | 380 | 596 | 642 | 273 | 785 | 296 | 940 | 349 |
| 1 லட்சத்திற்கும் மேல் | 386 | 230 | 313 | 373 | 616 | 214 | 677 | 338 | 828 | 396 |
| மொத்தம் | 7911 | 4672 | 6247 | 6336 | 8590 | 3993 | 8271 | 4312 | 8296 | 4287 |

**அட்டவணை 5.19 மொத்த வரவுகள், செலவுகளின் அடிப்படையிலான ஊராட்சிகளின் வகைப்பாடு**

| தொகை (ரூபாயில்) | 1989–90 | 1990–91 | 1991–92 | 1992–93 | 1993–94 | 5 ஆண்டு சராசரி |
|---|---|---|---|---|---|---|
| வருவாய்க் கணக்கில் | | | | | | |
| 0 – 5000 | 323 | 289 | 204 | 200 | 138 | 90 |
| 5001 – 25000 | 2684 | 2853 | 3524 | 2678 | 1946 | 1905 |
| 25001 – 50000 | 3264 | 3253 | 3579 | 3329 | 3261 | 3301 |
| 50001 – ஒரு இலட்சம் | 3251 | 3124 | 2666 | 3008 | 3254 | 3597 |
| 1 லட்சத்திற்கும் மேல் | 3061 | 3064 | 2610 | 3368 | 4084 | 3690 |
| மொத்தம் | 12583 | 12583 | 12583 | 12583 | 12583 | 12583 |

| தொகை (ரூபாயில்) | 1989--90 | 1990–91 | 1991–92 | 1992–93 | 1993–94 | 5 ஆண்டு சராசரி |
|---|---|---|---|---|---|---|
| வருவாய்ச் செலவு கணக்கில் | | | | | | |
| 0 – 5000 | 433 | 355 | 359 | 290 | 230 | 132 |
| 5001 – 25000 | 2956 | 2723 | 4068 | 3309 | 2523 | 2275 |
| 25001 – 50000 | 3306 | 3083 | 3514 | 3374 | 3382 | 4313 |
| 50001 – ஒரு இலட்சம் | 3187 | 3103 | 2548 | 2819 | 3028 | 3569 |
| ஒரு இலட்சத்திற்கு மேல் | 2701 | 3319 | 2094 | 2791 | 3420 | 3194 |
| மொத்தம் | 12583 | 12583 | 12583 | 12583 | 12583 | 12583 |

குறிப்பு:– தற்போது ஊராட்சிகளின் மொத்த எண்ணிக்கை 12,584 இதில் ஒரு ஊராட்சி, 1996 ஆம் ஆண்டு ஊராட்சித் தேர்தலுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்டது. 12,583 ஊராட்சிகள் தொடர்பாக மட்டுமே புள்ளி விவரங்கள் திரட்டப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

5.3.53. 1989–90 ஆம் ஆண்டில், சுமார் 37 சதவீதம் ஊராட்சிகள் நிதி நிலைமை பற்றாக்குறையாக இருந்தது. 1993–94 ஆம் ஆண்டில் 34 சதவீத ஊராட்சிகளின் நிதி நிலைமை பற்றாக்குறையில் இருந்தது. இது போலவே, 1989–90 ஆம் ஆண்டில், 50 சதவீத ஊராட்சிகளில் மொத்த வருவாய் ரூ.50 இலட்சத்தைக் காட்டிலும் அதிகரித்து, 1993–94 ஆம் ஆண்டில், பல்வேறு வேலைவாய்ப்புத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்தது உட்பட, 58 சதவீத ஊராட்சிகளின் மொத்த வருவாய் ரூ.50 இலட்சத்திற்கும் அதிகமாக இருந்தது. மாநில அளவிலான மொத்த நிலை, தனிப்பட்ட ஊராட்சிகளின் உண்மை நிலையைப் பிரதிபலிக்கவில்லை. (1) தனி நபர் வருவாய் வீச்சு (2) மக்கட்தொகை (3) பட்டியல் சாதியினர்/பட்டியல் பழங்குடியினர் சதவீதம் ஆகியவற்றிற்கிணங்க, ஒவ்வொரு ஊராட்சியும் தனித்தனியாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளன. குறைந்த வருமானத் தொகுதிகளைச் சேர்ந்த ஊராட்சிகளின் தனி நபர் வருமானம், தனி நபர் செலவைக் காட்டிலும் குறைவாக இருப்பதையும் வெவ்வேறு தொகுதிகளுக்கிடையே தனி நபரின் மொத்த வருவாய், செலவுகளில் பெரும் வேறுபாடுகள் காணப்படுவதையும் அவை குறிப்பிடுகின்றன. பல்வேறு வகைப்பாடுகளுக்கிடையேயும், ஒரே வகைகளுக்குள்ளேயும் காணப்படும் வேறுபாடுகள், பயனீட்டாளர் கட்டணங்கள், வரி வீதங்களிலுள்ள வித்தியாசம் வரி விதிப்பு வாய்ப்புகள் ஆகியவற்றிலுள்ள வேறுபாடுகளையும், அமுலாக்கத்தில் நிருவாகத் திறமையிலுள்ள வேறுபாடுகளையும் பிரதிபலிக்கின்றன. அதிக வருமானம் பெறும் தொகுப்பிலுள்ள ஊராட்சிகள் அதிக அளவில் மானியம் பெறுகின்றன; எனவே, நிதி மாற்றம் தொடர்பான தற்போதைய நடைமுறை ஏற்றத் தாழ்வுகளை சரி செய்வதற்குப் பதிலாக, அதிகரிக்கத்தான் செய்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 12,583 ஊராட்சிகளில் தனி நபர் அடிப்;படை வகையில் சராசரிக்கும் குறைவாக சொந்த வருமானம் பெறும் 6528 ஊராட்சிகள், சராசரிக்கும் குறைவான அளவில் தனி நபர் மானியங்களைப் பெறுகின்றன. மாறாக, தனி நபர் வகையில் சராசரிக்கும் அதிக அளவில் சொந்த வருமானம் பெறும் 1193 ஊராட்சிகள் சராசரிக்கும் அதிகமான அளவில் தனி நபர் அடிப்படை மானியங்களைப் பெறுகின்றன. இது, சம அளவு அடிப்படையில், மானியங்களைப் பகிர்ந்தளிக்கும் பொதுவான கொள்கை மீறப்படுவதைக் காட்டுகிறது. சொந்த வருவாய் அடிப்படையில் அளவிடப்படும் வருவாய்ப் பற்றாக்குறை மொத்தச் செலவில் 47.2 சதவீதமாகும். குறைந்தளவு மக்கள்தொகை கொண்ட ஊராட்சிகளில் இப்பற்றாக்குறை மிக அதிக அளவில் உள்ளது. இருப்பினும், ஒரு ஊராட்சிக்கும் மற்றொரு ஊராட்சிக்குமிடையே, வரி செலுத்தும் திறன் வேறுபடுவதால் நிதி ஆதார மாற்றங்கள் நியாயப்படுத்தப்படுகிறது. உயரளவு வரி விதிக்கும் திறனுள்ள சில ஊராட்சிகள், குறைந்த அளவு தேவைகளைக் கொண்டிருக்கின்றன. செலவை ஏற்கும் திறன் அடிப்படையில் பார்த்தால், அவை நிதி

வகையில் வலுவாகவுள்ளன. ஏனையவை இதற்கு எதிர்மாறான நிலையில் உள்ளன. இந்நிலையில், ஊராட்சிகளுக்கிடையே நிதி நிலைமை சமமான அளவில் இருக்கும் வகையில்,நிதி மாற்ற நடைமுறை பயனுள்ளதாகவும் ஆக்கப்பட வேண்டும்.

**5.3.54.** ஊராட்சிகளிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளை சரி செய்யவும், வெவ்வேறு உள்ளாட்சி மன்றங்களைச் சேர்ந்த மக்களுக்கு சமமான அளவிலும் போதிய அளவிலும் பணிகளைச் செய்து தரும் பொருட்டும் சில நடவடிக்கைகளை தமிழ்நாடு நிதி ஆணையம் பரிந்துரைத்துள்ளது. முதல் நடவடிக்கையாக உள்ளாட்சி மன்றங்களின் வருவாய் வாய்ப்பு குறித்து மதிப்பீடு செய்ய அதாவது, சொந்த நிதி ஆதாரங்களை திரட்டுவதற்குரிய திறன் பற்றி மதிப்பீடு செய்ய வேண்டுமென இவ்வாணையம் பரிந்துரைத்துள்ளது. இதன் பின்னர், உள்ளாட்சி மன்றங்கள் செய்து கொடுக்கவுள்ள பணிகள் குறித்த செலவு கணக்கிடப்பட வேண்டும். வழங்கப்படவுள்ள பணிகளின் அளவு, தரம் என்ன என்பது பற்றிய பிரச்சினை அடுத்ததாக எழும். வெவ்வேறு பணிகளின் அளவையும், தரங்களையும், நிர்ணயிப்பது மிகக் கடினமான பணியாகும். இருப்பினும், முக்கியமான பணிகளுக்காவது வரையளவுகளும் செலவு வரைமுறைகளும் நிர்ணயிக்கப்பட வேண்டும். பின்னர், வருவாய்ப் பற்றாக்குறை அல்லது தேவை அளவைக் கணக்கிட வேண்டும். தேவைப்படும் நிதியளவு தெரிந்துவிட்டால், முறையான தொகை மாற்று ஏற்பாடு மூலம், அவற்றிற்கு நிதியுதவி அளிக்க வேண்டும்.

**5.3.55.** இது தொடர்பாக, மாநில நிதி ஆணையம் பின்வரும் அம்சங்களைப் பரிசீலித்தது:-

1) வரி ஆதாரங்களை முழுமையாகப் பயன்படுத்தல், சொத்துக்களைத் தக்கவாறு மதிப்பிட்டு வரி விதித்தல், மேல் முறையீடு செய்வதற்கான நடைமுறையை எளிமைப்படுத்துதல், குடியிருப்பு, மற்றும் வணிகச் சொத்துக்கள், சொத்து வரியின் கூறுகள் ஆகியவற்றுக்கான வீதங்களைத் திருத்தியமைத்தல், வசூல் நடவடிக்கைகளைச் செம்மையுறச் செயல்படுத்துதல், சொத்து வரி விதிப்பிலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட்ட இனங்களை தீவிர மறு ஆய்வு செய்தல், உள்ளாட்சி மன்ற ஏனைய வரி வீதங்களைத் திருத்தியமைத்தல், பயனீட்டாளர் கட்டணங்களை முழுமையாக மறு ஆய்வு செய்தல் ஆகிய பணிகள் உள்ளாட்சி மன்றங்களின் சொந்த நிதி ஆதாரங்களைத் திரட்டும் நடவடிக்கைக்கு வலு சேர்க்கும்.

2) உள்ளாட்சி மன்றங்களின் வசூல் திறமைக்கு ஏற்ப அவற்றுக்கு கூடுதல் வரிகளை ஒப்படை செய்தலும், ஆயத் தீர்வை, விற்பனை வரி, மோட்டார் வாகன வரி முதலான சில வளர் தன்மை கொண்ட நிதி ஆதாரங்களைப் பிரித்துக் கொடுத்தல் ஆகியவற்றால் உள்ளாட்சி மன்றங்களின் வரி விதிப்பு அதிகாரம் அதிகரிக்கும்.

3) வரி வசூல் நடவடிக்கைத் திறன், மக்கள்தொகை, செலவுத் தேவை ஆகியவற்றின் அடிப்படையிலான ஒரு பகிர்வு முறை மூலம், நிதி ஆதாரங்கள் பங்கீடு செய்யப்பட வேண்டும். மானியப் பகிர்வுக் கொள்கை, செலவு சமன்பாட்டுக் கோட்பாட்டை நிறைவு செய்வதாய் இருத்தல் வேண்டும். அதாவது, உள்ளாட்சி மன்றங்களுக்கிடையே காணப்படும் ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்து நிதி அந்தஸ்தையும் பணி அளவுகளையும் சமன்படுத்தும் வகையில், இந்த நிதி ஆதார மாற்றங்கள் இருக்க வேண்டும்.

4) பணியின் தன்மையையும், வகையையும் பொறுத்து, அரசு சாரா அமைப்புகள் பணிகளைத் திறமையான முறையில் குறைந்த செலவில் செய்து முடிக்க இயலுமாயின், அப்பணிகளை தனியார் மயமாக்குவதற்கான சாத்தியம் பற்றி ஆய்வு செய்ய வேண்டும்.